www.tamilarangam.net

# சஞ்சீவி

# Chanchive

மலர். 31

1995



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1995

# சஞ்சீவி

மலர். 31

அட்டைப் படம்....

**கணணிக் கன்னிகை....**

**T.செளந்தர்.**

பக்கம்: உள்ளடக்கம்:


| | |
|---|---|
| 3 | நோக்கு |
| 4 | கவிதை: அஞ்சு மனிதமே |
| 5 | சிறுகதை: மறுபக்கம் |
| 8 | மனவருத்தங்கள் |
| 11 | பேட்டி: லெனினுடன் |
| 14 | கு.எ.போட்டி. இல: 27 |
| 16 | தெருக் கண்ட தெரு....... |
| 20 | INTERNET – செய்திக்கான மாற்று ஊடகம். |
| 22 | கவிதை – என் காதல் பொன் வண்டே |
| 23 | கவிதை – ஊசிகள் |
| 24 | கடிதம் |
| 26 | பேட்டி – ஆசிரியர் சிவாவுடன் |
| 33 | சிறுகதை – வந்தவள் வராமல் வந்தால் |
| 39 | கட்டுரை – கருக்கலைப்பு<br>கவிதை – மத்தியான மழை |


**தொடர்புகளுக்கு:**

**CHANCHIVE**
**DANMARKS GADE 10**
**7500 HOLSTEBRO**
**DENMARK.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நோக்கு

சஞ்சீவி இதழ்-30 வாசகர்கள் எல்லோருக்கும் கிடைத்திருக்கும். நாம் திட்டமிட்டபடி அது சிறப்புற அமையாதது எமக்குத் திருப்தியளிக்க வில்லை. ஆனால் வாசகர்கள் பலர் சஞ்சீவியில் வெளிவந்த ஆக்கங்கள் குறித்து நேரில் பாராட்டியமை எமக்குப் புது உற்சாகத்தை வழங்கியுள்ளது. சிலர் குறைநிறைகளை விமர்சன ரீதியிலும் கூறினர். அவர்களுக்கு எங்கள் நன்றி.

வாசகர்களே தங்கள் கருத்துக்கள் எதுவாயினும் உங்கள் சஞ்சீவியின் வாசகர்கள் பக்கத்தில் எழுதுங்கள். அவை ஏனையவர்களுக்கும் சென்றடைவதுடன் ஆக்கதாரர்களிடம் உற்சாகத்தை வளர்க்கும். பலருடைய கருத்துக்கள் விவாதிக்கப்பட்டு பரிமாறப்படுவதன் மூலமே நல்ல ஆரோக்கியமான கருத்துக்களுக்குச் சென்றடையமுடியும்.

ஒரு சில வாசகர்கள் சஞ்சீவியில் வேறு பத்திரிகைகளில் வெளிவரும் ஆக்கங்கள் கூடுதலாக இடம்பெறுவது பற்றி சுட்டிக்காட்டி யுள்ளார்கள். எல்லோருக்கும் எல்லா விதமான பத்திரிகைகளும் கிடைக்காத காரணத்தால் அவற்றில் வெளிவரும் சில முக்கிய விடயங்கள் முடங்கிப் போய்விடுவதாலும், எங்களால் முடிந்தவரை எங்களுக்கு கிடைப்பனவைகளில் முக்கியமான சிலவற்றை மறுபிரசுரம் செய்கின்றோம். உதாரணமாக 1994 கடைசிப்பகுதியில் இந்தியாவில் இடம்பெற்ற புலம்பெயர்ந்தோர் மாநாடு பற்றியும், அவர்களால் வெளியிடப்பட்ட "புலம் பெயர்ந்த தமிழர் நல மாநாடுச் சிறப்புமலர்' பற்றியும் புலம்பெயர்ந்த எங்களில் பலர் அறிந்திருக்கவில்லை. இந்தியாவிலும் கூட ஈழத்தமிழருக்காக நடைபெற்ற இந்த மாநாடு பற்றி இந்தியப்பத்திரிகைகளும் இருட்டடிப்புச் செய்து விட்டன.(பார்க்க: வாசகர் கடிதம்- ரவிக்குமார். இந்தியா) இப்படியான விடயங்களை நாங்கள் வெளியிடுவதன் மூலம் மற்றயவர்களும் அறிந்துகொள்ள வாய்ப்பாகின்றது.

மேலும் சஞ்சீவியில் "மகளிர் பகுதி" என்றொரு அம்சத்தையும் சேர்க்கும்படி சில வாசகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். இதுவரை காலமும் சஞ்சீவியில் ஆண் பெண் என்ற பாகுபாடில்லாமல் எல்லோருடைய ஆக்கங்களையும் பிரசுரித்து வருகின்றோம். இனியும் பிரசுரிப்போம். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் சஞ்சீவிக்கு எழுதுங்கள்.

நன்றி சஞ்சீவி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அஞ்சு மனிதமே!

அரவம் கேட்டு
அஞ்சும் மனிதமே
ஒரு முறை
RWANDA
சென்றுவா.....!

சொர்க்கம் என ஒன்றிருந்தால்
நரகத்தை அங்கே காண்பாய்....

குழந்தைகள் யாவரும்
உனது சொர்க்கம் என
இன்று வரை உன் மனம்
மகிழ்ந்திருந்தால்....
தலை பிடுங்கி
கரமறுத்து முளை
கருகிய விதைகளினை
விதைத்து உழுத வயல்களினை
அங்கு காண்பாய்.

சற்று நில்!
ஆழ்மனதுள் துளையிட்டு
சிந்தனையைத் தூண்டிக்கொள்!

உன் குழந்தைகள் நூறாய்
அறுந்து சிந்திப்
புரண்டு கிடப்பதைக்
கண்டு கொள்வாய்.

மண்ணில் மழை
மறைந்ததென்பாய்
இல்லை இல்லை
இல்லவேயில்லை

புரட்சியின் சாயமே
ஆறாய் ஓடிய
படிமத்தை காண்பாயங்கு.

லோகநாதன். செ.

www.tamilarangam.net

# மறுபக்கம்

— மீரா.



பிரேதம் எடுக்க இன்னும் மூன்று மணித்தியாலங்கள் தான் உண்டு, ஆஸ்பத்திரியின் பின்னேயுள்ள அந்தக் கப்பீலில் (Kapel), சைவ முறைப்படி இறுதிச் சடங்கை ஆற்றுவதற்கு எல்லா ஆயுத்தங்களும் செய்தாயிற்று. தூர இடங்களில் இருந்து வரவேண்டியவர்களும் வந்தாயிற்று : பாட்டுக்காரர் — கிரியை செய்பவர்கள் உட்பட.

ஜெயமோகன் — இயக்கத்தில் ஜெய்ஸ் — இத்தாலியில் ஸ்ரீமோகன் ஜேர்மனியில் ஜெயசீலன் — டென்மார்க்கில் மீண்டும் ஜெயமோகனாகி — பின் சிங்கப்பூர் சென்று திருமணமாற்றி வர ஓர் அண்ணையும் ஒட்டிக் கொள்ள ஜெயாஅண்ணை ஆகி — அதுவே நிலைத்திட... அந்த ஜெயா அண்ணை நேற்று மாலையின் அந்திக் கருக்கலில் ஓர் 'அது' வாகி,அந்த 'அது' வை வேளைக்கு எடுத்து விட்டால் மற்ற வேலைகளைப் பார்க்கலாம் என்ற யோசனையில் ஆளுக்கால் அம் மண்டபத்தின் மூலைகளில் கூடிக் கதைத்துக் கொண்டிருக்க,ஜெயா அண்ணையின் பெட்டிக்கு அருகில் ஏற்றி வைக்கப்பட்ட அந்த சின்னக்குத்து விளக்கு மட்டும் தன்பாட்டில் எரிந்து கொண்டிருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'காருக்குள்ளை இருக்கு : போய் அடிச்சிட்டு வருவமோ'
'அடிச்சாத்தான் ஒரு கிக்காய் இருக்கும்'

ஆனால் ஜெயா அண்ணைக்கு அந்த மாரடைப்பு ஏன் வர வேண்டும் என்பது யாருக்கும் புரியாத ஓர் புதிராய் இருந்தது.மனைவி வித்யாக்கு இந்த விநாடிவரை ஏதும் புரியவில்லை. நெஞ்சுக்குள் ஏதோ செய்யுது என்று படுத்தது மட்டும் தான்.எதையுமே சவாலாக எடுத்து சாதிக்கிற ஓர் வல்ல ஜீவன்.அதுக்குப் போய் எப்படி?

'ஏதும் வேலை பார்க்கிற இடத்திலை டெனிஸ்காரியோடை தொடுப்பு இருக்குமோடி. அதாலை........'
'கடவுளுக்குத் தான் தெரியும்.ஆனால் பெண்கள் எண்டால் ஆள் நல்ல சகயமாய் கதைப்பார்'

ஆட்கள் ஓரளவு வந்து விட்டார்கள்.அந்த மண்டபத்தில் இனி இருப்பதற்கு இடமில்லை : அல்லது நிற்க வேண்டும்.ஜெயா அண்ணையின் படம் போட்ட அஞ்சலித் துண்டுகளை வெவ்வேறு நிறத்தில் பரிமாறிக் கொண்டிருந்தார்கள்.இது வரை வழக்கத்தில் இல்லாதவாறு பக்கத்துச் சிற்றிக்காரர் கூட ஓர் இரங்கல் அஞ்சலித் துண்டு வெளியிட்டிருந்தார்கள்.யார்யாரோ எல்லாம் மலர் வளையங்கள் கொண்டு வந்து அடுக்கடுக்காய் வைக்கிறோர்கள்.–டெனிஸ் காரர் உட்பட.

'ஜெயா அண்ணை தலைமாலுக்கு அனுப்ப என்று கழிச்செடுத்த சீட்டு என்ன மாதிரி'
'வித்தியாக்காவோடை கதைச்சுப் பார்ப்பம்.அல்லது அவரின்ரை கார் இருக்குத்தானே'

காலடியில் இருந்த வித்தியாவுக்கு இனியொருதரம் அழ உடம்பில் பெலம் இருக்கவில்லை. கண்ணிலும் கண்ணீர் இல்லை.கன்னங்கள் வழியே கண்ணீர் காய்ந்திருக்க முகம் உப்பி வீங்கிப் போய் இருந்தது.மூத்தவன் மகேஸ்–வயது 5. அடுத்தது சரண்யா–வயது 3. சரண்யாக்கு 3வயதான போது ஒரு நாள் ஜெயா அண்ணை சொன்னார், 'பார் வித்தியா... இவள் பெரியபிள்ளை ஆகேக்கை எனக்கு 50ஆயிடும்.அப்பவே பெரிய ஓர் சாமத்திய சடங்கு செய்து பார்க்க வேணும்.ஏனெண்டால் அவளுக்கு கலியாண வயது வரேக்கை நான் இருப்பனோ இல்லையோ தெரியாது' .வித்தியாவின் கண்கள் மீண்டும் முட்டி பொலு பொலு என உதிர்ந்தது.

'பசும் பொன் கோப்பி எப்பிடி'
'அது தியேட்டரிலை பார்த்தால் தான் அப்படி இருக்கும்'

செல்லத்துரையண்ணை குத்து விளக்கையும் கொழுத்திய படி வாய்க்குள் ஓர் தேவாரத்தையும் முணு முணுத்தபடி காரியத்தில் இறங்கினார்.மண்டபத்தில் கதைகள் குறைய சாம்பிராணியும் கற்பூரமும் கலந்த புகை மெது மெதுவாக படரத் தொடங்கியது.
செல்லத்துரையண்ணையின் கண்ணைத்துப் பாடலும்,கதிர்காமரின் ஒப்பாரிப் பாடலும் யாரை–யும் அசையவிடாது கட்டி கண்களில் மட்டும் கண்ணீரை நிறைக்கப் பண்ணிக் கொண்டிருந்தது.

'பழுத்த தோலும் – இளைத்த நரம்பும்
இறுக்கி கட்டிய கூடடா.'
ஆனால் ஜெயா அண்ணைக்கு..... தோல் பழுத்ததோ? நரம்பு இளைத்ததோ??இல்லவேயில்லை.

www.tamilarangam.net

நாட்டுக்கு வந்த நாள் தொடக்கம் அவரை அவருக்குள் வாட்டிய ஓர் விடயம் தான்.

'தப்பி வந்திட்டனோ'

'தப்பி ஓடி வந்திட்டனோ'

'என்னை வளர்த்த அண்ணா குடும்பம் கஷ்டத்தில் இருக்க நான் மட்டும் தப்பி வந்திட்டனோ'

'வந்து இங்கு சுக வாழ்க்கை வாழுகின்றனோ'

அண்ணையாட்களை கூப்பிட முடியாமல் போனதிற்கு ஆயிரம் காரணங்கள், ஏழு பிள்ளைகளையும் அண்ணியையும் சேர்த்துக் கூப்பிடுவது இலேசான காரணமில்லை'

அண்ணியை முதல் தனியக் கூப்பிட்டாலும் மூத்த இரண்டு பிள்ளைகளுக்கும் வயது பதினெட்டைத் தாண்டியிருந்தது, ' 'அண்ணை கடைசி வரை தனிய வர மறுத்திட்டார், அண்ணையாக கொடுத்த வாழ்க்கையை நான் சுகமாய் அனுபவிக்க , அண்ணை அங்கு கஸ்ரப்பட நான் மட்டும் இங்கு சுகமாய் வாழுறனோ' .

இந்த மனஉளைச்சல் இத்தாலியில் சேர்க்கஸ் கம்பனியில் வேலை செய்யும் போதேயே தொடங்கிய ஒன்று . தான் நல்ல சாப்பாடுகள் சாப்பிடும் போது , தான் நல்ல உடுப்புக்கள் போடும் போது, தனக்கு பிள்ளைகள் பிறந்து அவர்கள் நல்லது உடுக்கும் போது–சாப்பிடும் போது, மேலாக தான் எந்த ஐரோப்பியச் சுகத்தையும் அனுபவிக்கும் போதும் அந்த உளைச்சல் கண்டுவிடும். அன்று அவருள் அவராய் அவர் இருக்க மாட்டார். அந்த உளைச்சலுக்கு எல்லாம் பரிகாரம் தேடியது பணத்தினால்த் தான். தனக்கென்று ஓர் குடும்பம் இருப்பது என்று எண்ணமில்லாமல் தன்னால் முடிந்த எல்லாத்தையும் தமையன் குடும்பத்துக்கு செய்து வந்தார் . வித்தியாவும் அதில் உள்ள தியாகத்தை உணர்ந்து மௌனமாக இருந்தாள்.

அவருள் எழுந்து அவரையே வாட்டும் அந்த மனஉளைச்சலின் உச்சகட்டம் தான் நேற்று வந்த ரெலிபோன். வித்தியா வேறு வீட்டில் இருக்கவில்லை. கொழும்பு வந்த ஒருவர் சொன்ன தகவல் இது.ஜெயா அண்ணையின் மூத்த மகன் சசியை எட்டு நாளாகக் காணவில்லையாம். ஜெயா அண்ணை முழுக்க முழுக்க ஓர் வலது குறைந்தவர் போலானார். மனம் மட்டும் உளையத்தொடங்கியது. வீட்டை இருந்தால் இன்னமும் விசராய் இருக்கும் என்றதால் வேலைக்கு எப்படியும் போவது எனத்தீர்மானித்தார்.

சைக்கிள் ஓடும் போது–வேலைத்தளத்தில் இருக்கும் போது –எஞ்சின் தாளத்திற்கேற்ப போத்தல்களை எடுத்து அடுக்கும் போது–சாப்பாடு இடைவேளையின் போது –மீண்டும் வீட்டுக்கு வரும் வீதிகளில் எல்லாம்–அண்ணா....சசி....அண்ணா....சசி....அண்ணா....சசி.... உங்களையெல்லாம் உப்பிடித் தவிக்க விட்டு தான் மட்டும் 'தப்பிவிட்டேனோ' 'தப்பிவிட்டேனோ' 'தப்பிவிட்டேனோ'

'தம்பி அப்பாவுக்கு விபூதியை பூசிவிட்டு காலடியில் விழுந்து கும்பிடுங்கோ '

அந்த நாலு வயதுப் பாலகனின் பரிதாபத்தைப் பார்ப்பதற்கு வந்திருந்த அனைவருமே வாய்விட்டு அழுதார்கள்.

'ஊருக்குப் போகவேணும் அண்ணையைப் பார்க்க வேணும் அண்ணையின் பிள்ளைகளையெல்லாம் நல்லாக்க வேணும் எண்டு சொன்னையளே ,இப்ப எங்கே போறியள்' என்ற வித்தியாவின் கடைசி ஒப்பாரியில் அங்கிருந்த அனைவரும் ஓர் செத்த வீட்டில் இருந்ததாக உணர்ந்தார்கள். ஜெயா அண்ணையின் கடைசிப் பயணம் ஊரத்தொடங்கியது

(உணர்வுகளைத் தவிர யாவும் கற்பனையே)

www.tamilarangam.net

# மனவருத்தங்கள்

க. ஆதவன்

ஒரு கரும்பாறையில் குந்தி இருக்கின்றேன்.
கடற்கரை........
அலைகள் வந்து மோதுகின்றன.

'சமர்' என்பது அருகில் படுத்திருக்கும், மணல் ஒட்டிக்கொண்டுள்ள வெள்ளை மேனிகளைப் பார்த்தால் தெரிந்துவிடும்.
பிறந்தமேனியாய்......
சூரியனைத் தேடுவதில்.......
வெண்மேனி கறுப்பாவதில்.......
எவ்வளவு அக்கறை இந்த ஆரணங்குகளுக்கு!

அணங்குகளை யாரும் பார்க்கலாம்.
சிலவேளைகளில் பார்க்கிறதுக்கென்றே படுத்துள்ளார்களோ யாரறிவர்?

நானும் பார்த்தேன்.
அவனும் பார்த்தான்.
நான் கண்ட காட்சி
அவனும் கண்டான்.
நானும் தமிழன்.
அவனும் தமிழன்.
நான் 'நுகர்ந்ததை' அவனும் நுகர்ந்தான்.

எனக்குத் தாடிமயிரில் நரைவிழத் தொடங்கியதால்–
சிலவேளை அவன் என்னை ஏளனமாகப் பார்த்திருக்கக்கூடும்.
அவனுக்குள் அவனோர் இளைஞன் என்ற நினைப்பு.

தமிழர்கள் விருந்தோம்பலில் சிறந்தவர்கள் என்பதாக இருக்கக்கூடும். அவன் என்னிடம் ஒரு பியர் போத்தலை நீட்டினான். எதற்கும் மறுப்புத் தெரிவிக்கத் தெரியாத நான் அதனைப் பெற்றுக் கொண்டேன்.

அவனே தொடர்ந்து கதைத்துக் கொண்டிருந்தான். டெனிஷ் பெட்டையள் நல்ல வடிவு என்று சொன்னான். எல்லாத்துக்கும் கெதியிலை 'ஓம்' அல்லது 'இல்லை'

www.tamilarangam.net

எண்டு சொல்லிப் போடுங்கள் என்றான். அனுபவிக்கிற நேரத்திலை எல்லாத்தையும் அனுபவிச்சுப் போடவேணும் என்று சொன்னான்.

லைலா, டோட்ட, மரியா, லின்டா, என ..... தன்னோடை படுத்த பெட்டையளைப் பற்றிச் சொன்னான். அந்தப் பெண்கள் எப்படி உதட்டுக்குச் சாயம் பூசுறது, 'ரொயிலெட்டு'க்குப் போய் வந்த பின் உள்ளங்கிளை எப்படி நாசூக்காக மாத்திறது என்டெல்லாம் விலாவாரியாகச் சொன்னான்.

இன்னுமொரு பியர் வேணுமோ எண்டு கேட்டான். நான்தானே ஒன்றுக்கும் மறுக்கிறதில்லையே!

தொடர்ந்து அவனே அறுத்துக் கொண்டிருந்தான். நான் என் பாட்டுக்கு 'உம்' 'அதுசரி' 'பரவாயில்லை' 'பிறகென்ன' 'நல்லது' 'சரியாப்போச்சு' என்பன போன்ற வார்த்தைகளை என் உணர்வின்றி வெளிப்படுத்திக் கொண்டிருந்தேன்.

"அண்ணை நான் எல்லாம் அனுபவிச்சிட்டன். எனக்கு இப்ப இருக்கிற ஒரே ஒரு பிரச்சனை கலியாணம் கட்ட வேணும் எண்டிறதுதான். அப்பர் அம்மாக்கள் கனக்கப்போட்டோக்கள் அனுப்பினவை. ஒண்டும் அமையுதில்லை. எனக்கு வாற பொம்பிளை நல்ல அடக்கமா பண்பா எங்கடை கலாச்சாரத்துக்கு ஒத்துப்போற மாதிரி கற்போடை வரவேணும். அப்பதான் குடும்பத்துக்கு நல்லது. பத்தினிப்பெண் எண்டு அந்தக்காலத்திலை சும்மாவே சொன்னவை. முதலிரவு.... சாந்திமுகூர்த்தம்.... இதுகள் இருந்தால்தானே அண்ணை தமிழ்க் கலாச்சாரத்துக்கு நல்லது. அதுதானே எங்கடை பண்பாடு. அதோடை வ ற பொம்பிளை ஒரு "அண்டஸ்ராண்டிங்கோடை(understanding) வந்திட்டான் எண்டால் வாழ்க்கை சொர்க்கம்தான்." என்றான்.

என்னிடம் ஒரு சிகரட்டை நீட்டினான். "சரியண்ணை போட்டு வாறன், சமரை என்ஜோய் பண்ணுங்கோ" என்று சொல்லிவிட்டுப் போய்க் கொண்டிருந்தான். இவன் புரிந்த லீலைகளுக்கு, கட்டாயம் இவனுக்கு ஏதாவது அந்தரங்க நோய் இருந்தாற்கூட ஆச்சரியப்படுவதிற்கில்லை.

ஆனால் இவன் தேடுவதெல்லாம் ஒரு கைபடாத றோஜாவை; கறைபடாத சித்திரத்தை. அதற்கு இவன் தேடும் நியாயம் தமிழ்க் கலாச்சாரம்; தமிழ்ப்பண்பாடு.

அங்கிருந்து பெற்றோர்கள் தமது செல்லப்பெண்ணை– கற்புடன் காப்பாற்றி....... கிளிப்பிள்ளை போல் வளர்த்து வெளிநாட்டு மாப்பிளைக்கு ஒரு ஏஜென்சி மூலம் அனுப்பி வைப்பார்கள்.

தமிழ் முறைப்படி– மணவறை பிடித்து பிரான்சிலிருந்து ஐயர் வந்து; லண்டனில் கார்ட் அடித்து; சிங்கப்பூரில் கூறை எடுத்து; ஒரு திருமண வைபவம் நடக்கத்தான் போகுது.

பத்தாக்குறைக்கு டெனிஷ் நண்பர்கள் எல்லாரையும் 'இன்வைற்' பண்ணி இப்படித்தான் தமிழரின் "wedding நடக்கிறது என்று சொல்லி உள்ளூர் டெனிஷ்

www.tamilarangam.net

பத்திரிகையில் செய்தியும் போட்டு......தூ

அந்த மீட்டப்படாத வீணையின் தந்திகள் கலாச்சாரம் என்ற பெயரில் அறுபடத்தான் போகின்றன.

அந்த வீணைக்காக, அந்தக் கைபடாத றோஜாவுக்காக, அந்தக் கறைபடாத சித்திரத்துக்காக.........

எங்காவது பிச்சையேந்தி இன்னுமொரு போத்தல் பியரைக்குடிக்க வேண்டும்.

குடித்துவிட்டு மீண்டும் போதையில் வர வேண்டும்.

அப்பொழுது இதே கரும்பாறையில் வந்து மோதும் அலைகளின் சத்தத்துடன்...... ஒரு நல்ல 'சமரில்'............ நான் தமிழனாகப் பிறந்ததை- அதுவும் ஒரு பக்க நியாயம் பேசும் மானிடர் மத்தியில் வாழ்வதை எண்ணி வெட்கப்பட்டுக் கூனிக்குறுகிச் செத்துத் தொலைய வேண்டும்.

## வாசகர்களின் கவனத்திற்கு!

31வது சஞ்சீவி இன்று உங்கள் கையில் கிடைத்திருக்கின்றது. கணணிப்பதிப்பில் விடுவதன் காரணத்தால் எம்மால் வழமை போல்60 பக்கங்களில் வெளியிட முடியாமல் போய் விட்டது. இனிவரும் சஞ்சீவிகளும் ஒரு சில பக்கங்கள் குறைந்தே வெளிவரும் என்பதை அறியத்தருகின்றோம்.

—சஞ்சீவி.

# ஹியூமனிஸ்ட்!

### லெனினுடன் ஒரு கலந்துரையாடல்

டென்மார்க்கில் நடைபெற்ற சின்ன படங்களின் (Short Films) விழாவில் "நாக் அவுட்" படத்துக்காக அழைக்கப்பட்டார் அந்தப் படத்தின் இயக்குனர் லெனின். டென்மார்க் அரசு பத்து நாட்கள் தங்குவதற்கான செலவுகளை ஏற்கத் தயாராகவே இருந்தது - "அந்தப் பணத்தை என்னிடம் கொடுங்கள்... நான் இன்னொரு சின்ன படத்தை எடுக்கிறேன்" என்றாராம் லெனின். கடைசியில் அவர்களது வற்புறுத்தலால் விழாவில் கலந்து கொண்டார். கௌரவிக்கப்பட்டார்.

படமெடுப்பதற்காக இவர் பணம் சேர்க்கும் பணி வித்தியாசமானது. தெருவில் இறங்கி உண்டியலும் கையுமாக அலைந்து நன்கொடையாளர்களைச் சேர்த்து காத்திருந்து படமெடுக்கிறார். தரமான, வித்தியாசமான படம் எடுப்பதற்காகக் கையேந்திக் கொண்டிருக்கும் (அவரே சொன்னது தான்!) லெனினிடம் பேட்டி கேட்டுச் சென்றோம்.

"எதுக்குய்யா பேட்டி.... பேட்டி எடுத்து என்ன பண்ணப்போறீங்க?" எங்களிடமே திருப்பிக் கேட்டார்.

"என்ன சார் விரக்தியாகப் பேசுகிறீர்களா?"

"நிட்சயமா இல்லை. விரக்தி என்று நினைத்திருந்தால், நான் என்றோ பீல்டை விட்டுப் போயிருப்பேன்... பேட்டி என்பது தேவையில்லாத விடயம்" என்ற லெனின் மௌனமானார். திடீரென்று "கமல் படங்களுக்கு இனி நான் எடிட்டிங் செய்யப்போவதில்லை"என்றார்!

"ஏன் சார், என்ன விடயம்?"

"ஆமாம்... எல்லாமே சொல்வதொன்றும் செய்வதொன்றுமாக இருக்கிறது. நிறையப் பணம் கிடைக்கும் என்பதற்காக நான் என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாரா இல்லை. அதுக்குத்தான் பலர் இருக்கிறார்களே! கமல் மட்டுமல்ல... ரஜினி, மணிரத்தனம் எல்லோருமே புதுசா என்ன பண்ணிட்டாங்க. "அப்படியே ஆடவிட்டு இருந்ததை இப்படி ஆடவைச்சிருக்காங்களே." தவிர, வேற ஒன்றும் பண்ணிடலே! இதுக்கெல்லாம் காரணம் யார்?

தப்பெல்லாம் நாம (கிரியேட்டர்ஸ்) பண்ணிட்டு ஜனங்க மேலே குற்றம் சொன்னா எப்படி? என்னோட "நாக் அவுட்" படத்தைப் பல இடங்களிலே திரையிட்டபோது பலர் "இந்தப் படம் புரியவே இல்லைன்னாங்க...

அவங்களுக்குப் படம் புரியாததுக்குக் காரணம் யாரு? தொடர்ந்து ஒரே குப்பையை மட்டும் கொடுத்து கொடுத்து அவங்களை அதை மட்டுமே பாக்க வெச்சது யார் தப்பு. நம்ம



---

*சிறந்த திரைப்பட இயக்குனர் பீம்சிங்கின் மகனான லெனின் அவர்களை தமிழ் நாட்டில் இயக்கி லெனினிட்ட குறுந்திரைப்படமான "நாக் அவுட்" படம் சிறந்த திரைப்பட விழாவில் (Film Festival) பங்கு பற்றியது. இப்படத்திற்கு டென்மார்க் அரசு பரிசு வழங்கியதுடன் இயக்குனர் லெனினை டென்மார்க் அழைத்து கௌரவித்துள்ளது. அழைத்த [illegible] தமிழ் நாட்டு திரைப்பட உலகில் லெனினது இந்த முயற்சி அனைத்து தமிழ் மக்களுக்கும் பெருமை தேடித்தந்துள்ளது. லெனின் தமிழ்த் திரையுலகின் மிகச் சிறந்த படத் தொகுப்பாளர் (Editor) என்பது குறிப்பிடத்தக்கது.*

www.tamilarangam.net

(டைரக்டர்கள்) தப்புதானே? "கருத்தம்மா" ஒரு நல்ல சப்ஜெக்ட். அதுல ஏன் காதல் பாட்டு எல்லாம் அதெல்லாம் இல்லேன்னா படம் ஓடாதா? சனங்களுக்கு இதுதான் பிடிக்குமென்னு முடிவுபண்ண இவங்க (டைரக்டர்) யாரு?! – பொரிந்து தள்ளிவிட்டார் லெனின்.

"பிரபல நடிகர்கள் நீங்கள் எடுக்கிற நல்ல படங்களில் நடிப்பதில்லையே.... ஏன்?" என்று கேட்டோம்.

அதே வேகத்தில் பேசினார்... "என் படத்தில் (நாக் அவுட்) பிணமாக நடிக்கத் தாடியுடன் ஒருத்தர் வேண்டும். நான் தாடியுள்ள ஒருவரைத்தான் தேர்வுசெய்ய முடியுமே தவிர தாடியை ஒட்டி நடிக்க வைப்பது எல்லாம் எனக்குப் பிடிக்காது. பிரபல நடிகராக இருந்தால் என்னோட படத்துல தாடியுடன் நடித்து விட்டு "சார், சீக்கிரமா படத்தை முடியுங்க... வேறு படத்துக்கு தாடியில்லாம நடிக்கணும்"னு சொல்லுவார். இதெல்லாம் எனக்குத் தேவையில்லை. பாப்புலர் ஆர்ட்டிஸ்ட் நடிச்சாத்தான் படம் ஓடும் என்று சொல்றதெல்லாம் திறமையில்லாதவங்களின் வாதம்..."

"டைரக்டர்களை நம்பிப் பணம் கொடுக்கும் தயாரிப்பாளர்களின் நிலைமைகளையும் நாம் யோசிக்க வேண்டியிருக்கிறதே?" இது நம் வாதம்.

"தயாரிப்பாளர்கள் மனதில் பிரபல நடிகர்கள் நடிக்கவில்லை என்றால் படம் ஓடாது என்ற நிலையை உருவாக்கியதும் இந்த டைரக்டர்கள் தான். இன்று கேரளாவில் பத்மராஜன், அரவிந்தன், ஆடுர் கோபாலகிருஸ்ணன் போன்ற டைரக்டர்களை நம்பிப் படம் தயாரிக்கத் தயாரிப்பாளர்கள் இல்லையா என்ன? டைரக்டர்களும் கார், பங்களா என்று வசதியுடன்தான் இருக்கிறார்கள்."

***கமல் படங்களுக்கு இனி நான் எடிட்டிங் செய்யப் போவதில்லை...............***



"ஆர்ட் பிலிம் என்று சொன்னாலே தயாரிப்பாளர்களும் சரி விநியோகஸ்தர்களும் சரி... பயப்படும் நிலைக்குத் திரையுலகம் தள்ளப்பட்டதற்கு என்ன காரணம்?" என்றபோது....

"அதுக்கு அவங்களைச் சுற்றி இருக்கிற மனிதர்கள்தான் காரணம்" என்று பதில் சொன்னார். தொடர்ந்தார்... "ஒரு டைரக்டர் ஆர்ட் பிலிம் விசயமாகத் தயாரிப்பாளரை அணுகினால் இந்த குரூப் என்ன பண்ணுது தெரியுமா? வேண்டாம் சார்... இவன் உங்களைக்கவிழ்க்கப் பார்க்கிறான். வேண்டாம்.... எப்பவும் மாதிரியே நாம படம் பண்ணுவோம். இந்த ரிஸ்க்கே வேண்டாம் என்கிறார்கள்."

"ஓகே.... இந்த மாதிரி டைரக்டர்கள் யாரைத்தான் அணுக முடியும். நீங்களே ஒரு தீர்வு சொல்லுங்களேன்."

"ஏன் இவர்கள் எல்லாம் NFDC- க்கு ஸ்கிரிப்ட் அனுப்பக்கூடாது? NFDC-ல் கேட்டால் அங்கே எங்கே சார் தமிழ்நாட்டிலிருந்து எந்த ஸ்கிரிப்டுமே வர்றதில்லே அப்படீங்கறாங்க. விசயம் இதுதான். இவங்கள் ஸ்கிரிப்ட் எழுதி அனுப்பினால் அவங்க சொல்ற பட்ஜெட்டுக்குள் செய்ய முடியாது. படம் காட்சிக்குள் செலவழிக்கிற பணத்தை ஒரு படமே பண்ணிடலாம். நான் பண்ணினேன். "நாக் அவுட்" படத்துக்காக எனக்கு NFDC- யிருந்து அறுபத்து மூன்றாயிரம் ரூபாய் அனுப்பியிருந்தார்கள். என்னைப் பொறுத்தவரை இது வெற்றிதான்!"

"உங்களோட அடுத்த படம் பற்றி.....?"

"என்னோட அடுத்த படம் தொண்டன்". இந்த படத்துக்காக இதுவரை தெருவில் இறங்கிப் பன்னிரண்டாயிரம் ரூபாய் வரை கலெக்ஸன் செய்துள்ளேன். இன்னும் பல கல்லூரிகளுக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கேட்டுப்போகலாம் என்றிருக்கிறேன்!''

திரைப்படக்கல்லூரி மாணவர்களின் வருகை – திரைப்படத்துறையில்மாற்றத்தை ஏற்படுத்தவில்லையே. ஏன்?'' என்று கேட்டு வைத்தோம்.

''ஒரு விடயம்... திரைப்படக்கல்லூரி மாணவர்களின் ப்ராஜெக்ட் படங்கள் எல்லாம் அருமையாக இருக்கின்றன. ஆனால், இவர்கள் பீல்டில் நுழைந்தவுடன் இங்கிருக்கிற நிலைமையை எல்லாம் பார்த்து இவர்களும் மேலும் தரக்குறைவான படங்களைத்தான் எடுக்கிறார்கள். நல்ல விடயங்களைத் தராத சினிமா நமக்குத் தேவையில்லை. சினிமா இல்லாமல் இருக்க முடியுமான்னு நீங்க கேட்கலாம். எத்தனை தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும் கேட்கலாம்.

சினிமா இல்லாமல ஏன் இருக்க முடியாது? அப்படி ஒரு நிலைமை உண்டானால் நானும்தானேய்யா வெளியே போயாகணும். எங்கிட்ட கூட லாரி லைசென்ஸ் இருக்குது. லாரி ஓட்டிப் பிழைச்சுக்குவேன்'' என்றார் ஆவேசமாக.

''இதையெல்லாம் நான் சொல்றதைக் கேட்டுட்டு நான் கம்யூனிஸ்ட்டுன்னு தீர்மானிச்சுடறாங்க. அதுக்குமேல் நான் ஒரு கியூமனிஸ்ட்ஸ் சமீபத்தில் ''தமிழக முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஒரு கூட்டத்திற்க்கு ஏற்பாடு செய்திருந்தது. சினிமாக்காரன் என்ற அடிப்படையில் நானும் கலந்து கொண்டேன். அந்த விழாவில் துவக்க நிகழ்ச்சியாக கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனின் சிலைக்கு நடிகர் கமல் மாலை அணிவிக்கப்போவதாக இருந்தது. ஆனால், இரண்டு மணி நேரம் லேட்டாகவே வந்தார் கமல். ஆனால், அடுத்து நடைபெற்ற கவியரங்கத்தில் கவிஞர்கள் கவிதை வாசிக்கும் போது நேரமாகி விட்டது என்று மூன்று நிமிடத்துக்கு ஒரு முறை பெல் அடிக்கிறார்கள்! பாவம் கவிஞர்கள்... அரைகுறையில் முடித்து விட்டு அமர்கிறார்கள். இப்படியிருந்தால் முற்போக்கு எப்படி வளரும்?! இதெல்லாம் முற்போக்குத்தனமான விடயங்களா என்ன?!''

பேட்டி கேட்டு சென்ற எங்களுக்கு காண்ட்ரவர்சியல் கருத்துக்களைக் கொடுத்து சிந்திக்கவைத்த கியூமனிஸ்ட் லெனினுடம் புகைப்படம் கேட்டதற்கு, அவருக்கே உரித்தான பாணியில் ''என்னய்யா... இப்பத்தான் கதை கதையாகச் சொன்னேன்... போட்டோகீட்டோஎல்லாம்வேண்டாம்''என்றார்.

முற்றும்.

– நன்றி விகடன்.

## நினைவுகள் ஒரு கணம் நின்ற போது.......

பொய்கையில் மலர்ந்த மலரானேன்
வைகையில் ஓடும் படகானேன்
கையில் தவழும் விளையானேன்
இன்று சைகையில் வாழும் மனிதனானேன்

---

வீட்டுத்திண்ணையில்படுத்து உறங்கினேன்
மேடு பள்ளம் என ஓடித்திரிந்தேன்
காட்டுத்தீ போல் பறந்து திரிந்தேன்
இன்று நாடு விட்டு நாடு வந்தேன்

---

தூய்மையான எண்ணம் கொண்டேன்
வாய்மை என வாய் திறந்தேன்
மேன்மை தனை மேற்கொண்டேன்
இன்று தீமை என திடம் கொண்டேன்

---

வேறுபட்டுச் சிதறிய சிந்தனைகள்
கீறுபட்டு இளகிய இதயங்கள்
சேறுபட்டுச் சிதைந்த சிற்பங்கள்
இன்று மாறுபட்டு வாழும் மனிதானேன்

-சாம்பவி

---


## ஏனோ?

சூரிய காதலன்
வரவைக் கண்டதும்
இருள் என்னும்
தன்னாடையினை
பூமிப் பெண்
அகற்றுவது ஏனோ?

*– அலன் அலோசியஸ்*

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப்போட்டி




இலக்கம் : 27

### இட - வலம்

1- 4: இதனை ஓவியம் என்பர்.

15-11: எந்தவித உழைப்புமின்றி ஏனையோரைச் சுரண்டிவாழும் மனிதனை இப்படியும் கூறுவர்.

17-21: இது மாற்றம், வளைவு என்று கூறப்படும்.

24-23: பிடி என்பதனை பேச்சு வழக்கில் கூறும்போது இப்படி அமையும்.

30-32:: சந்தர்ப்பம் என இதைக் கூறினாலும், இது ஒரு விளையாட்டின் பெயருமாகும்.

33-34: இதனைக் காற்று எனலாம்.

40-37: இது ஒரு கீரை வகையாகும்.

44-41: சொல் என்பதன் மறுபொருளில் ஒன்று இதுவாகும்.

50-54: அடிவானம் என்ற இது இங்கு குழம்பியுள்ளது.

58-60: இடம், நிலம் என்றவற்றை இது உள்ளடக்கிய சொல்.

63-64: மருத்துவத்துக்குப் பயன்படும் செடிவகைககளை இப்படிக் கூறுவர்.

### மேல் - கீழ்

1-41: உடல், உளரீதியாய் அவஸ்த்தைக்குட் படுத்துவதை இப்படிக் கூறுவர்.

3-27: இது பலவந்தமாக ஏற்க வைத்தலாகும்.

-8- இது யாப்பிலக்கணப்படி எழுதப்பட்ட பாட்டு.

15-39: பாதியாய் கிழிக்கப்பட்ட காய்ந்த பனங்கிழங்கு இது.

20- 4: ஓலைக் குடிலுக்குள் படுப்பதற்காய் இது இருக்கும். குழம்பியுள்ளது.

30-54: இது கேட்டு உறங்காத குழந்தைகள் இல்லை என்பர்.

40-34: இது தேவையற்ற பேச்சு என்றபோதும், இதை அளப்பதால் எதுகும் நிறைந்ததாகவில்லை.

44-60: கடலின் ஆழமான பகுதி நீலமாய்த் தோன்றுவது போல் மேற்பகுதியான இதுவும் பொதுவாக நீலமாகவே தோன்றும்.

56-64: விடியலை இப்படியும் கூறுவர். ஆனால் குழம்பியுள்ளது.

58-34: தொழிலாளியின் வியர்வை காயுமுன் இதனை கொடு என்பர்.

www.tamilarangam.net

சஞ்சீவி உங்கள் கைகளுக்கு காலக்கிரமத்தில் கிடைத்து 15 நாட்களுக்குள் கு.எ.போட்டியின் பூர்த்திசெய்த தாளினை எமக்கு அனுப்பி வையுங்கள். முகவரி மாறியோர் புதிய முகவரியினை மறவாது அறியத்தாருங்கள். நன்றி

# குறுக்கெழுத்துப்போட்டி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ம | 2 ண | 3 ம் | | 5 டி | 6 ட் | 7 போ | |
| 9 ர | | 11 ர | 12 ம் | 13 வா | | 15 ர் | 16 கா |
| 17 ண | 18 ம் | 19 பா | | | 22 ஆ | | 24 டை |
| 25 ம் | 26 ன | | 28 அ | 29 தி | 30 கா | 31 லை | |
| | 34 ஈ | 35 வு | | | 38 ய | 39 சா | 40 ம் |
| 41 தே | | 43 ல | 44 அ | 45 வ | 46 ம் | | 48 ல |
| 49 யி | | 51 பு | 52 ய | 53 ல் | | 55 தி | 56 ச |
| 57 லை | 58 க | | 60 ல் | 61 ய | 62 சா | | 64 கு |

இலக்கம் : 26

கு.எ. போட்டி இல. 26 விடைகள்

இட. வலம்:
1- 3: மணம்
7- 5: போட்டி
13-11: வாரம்
16-15: கார்
19-17: பாணம்
28-31: அதிகாலை
34-35: ஈவு
38-40: சாயம்
43-46: அவலம்
51-53: புயல்
57-58: கலை
56-55: சதி
62-60: சாயல்

மேல்-கீழ்
1-25: மரணம்
7-15: போர்
13- 5: வாடி
16-24: காடை
19- 3: பாரம்
22-46: ஆகாயம்
34-18: ஈனம்
39-31: சாலை
41-57: தேயிலை
44-60: அயல்
45-61: வயல்
51-35: புலவு
64-40: கூலம்

பரிசு பெறுவோர்:

1. Mayura K. Selvarajah
   5600 Fåborg

2. Kavitha Sivabalasundram
   5700 Svendborg.

www.tamilarangam.net

# " தெருக்கண்ட தெரு "



......முரளி......

## எரிந்தநிறங்கள்

1990 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஒருவெள்ளிக்கிழமை. சுமார் இரவு 10 மணியிருக்கும் வொலிபோல் விளையாடிவிட்டு வந்த களை. சமைத்துச்சாப்பிட எனக்கு ஏதோபோலிருந்தது. இனி கோழியையோ அல்லது வேறுஒன்றையோ வெளியால்எடுத்து ஊறப்போட்டு சமைத்துச் சாப்பிட விடிந்துபோய்விடும். நினைத்துப்பார்க்க இந்தத்தனிமைநிறைந்த டென்மார்க் வாழ்க்கை ஒருகணம் வெறுப்புத்தட்டியது. எனனுடைய வீட்டுக்குமுன்னாலிருக்கும் அந்தப்பாலத்தின்கீழே இறங்கி நடந்துபோனால் ஒரு 200றோ 300 மீற்றர்தான்வரும்.அந்தக்கிறில்பார்.ஒரு அரைக்கோழியும் பொரித்த ஒருளைக்கிழங்கும்அ ஒரு குளிர்பியரும் அடித்தால் "அப்பா" நிம்மதியாய்வந்து தூங்கலாம். கோப்பைகளை பாத்திரங்களை கழுவித்துடைத்து அடுக்கவேண்டும் என்றவேலையும் இருக்காது.

www.tamilarangam.net

நினைத்ததுதான்........... கொஞ்சநேரத்தில் கிறில்பாருக்குள் நுழைந்துவிட்டேன். வழமையைவிட கொஞ்சச்சனம்தான். சாப்பிடுபவர்களும் அங்கே இருக்கும் மெசின்களில் காசுபோட்டு விளையாடுபவர்களுமென கொஞ்சப்பேர்தான். அங்கே நின்று அட்டகாசம் செய்யும் அந்த நில்சைக் காணவில்லை. நில்ஸ் ஒரு 10,15 வயதுமதிக்கத்தக்கவன். ஒருதரம் சுற்றும்முற்றும்பார்த்தேன்.அவனில்லாதது எனக்கும் கொஞ்சக்காசு மிச்சம்தான். சிலவேளையில் அவன் என்னை ஒரு குறோனோ இரண்டு குறோனோ கேட்பான். அவனின் விருப்பத்திற்கு நானும் கொடுப்பது வழக்கம். சிலவேளை ஒரு சின்னக்கோலா வாங்கிக்கொடுத்தால் அவன் நல்லஆனந்தமடைவான். அந்த நில்சைத்தான் இன்று காணவில்லை. அவன் நின்றால் இந்த வெள்ளையர்கள் மத்தியில் எனக்கும் ஒருசிறுதுணிவோடு இருந்து சாப்பிட விருப்பமாய் இருக்கும்.

சரி. இனி நினைத்தென்ன....என வாங்கிச் சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தேன்.

ஒரு பெரிய லொறி அந்தக்கிறில்பார் வாசலின்முன்னால் நிற்பாட்டப்பட்டிருக்கின்றது. அந்த லொறியின் அருகில் நில்ஸ் தலைகுனிந்தபடி நிற்கின்றான்.

" ஹாய் ! நில்ஸ்" என்றபடி அவனருகில் நெருங்கினேன். தலையை நிமிர்த்தியபடி தனது கைக்குள்ளிருந்த ஒரு பூனைக்குட்டி ஒன்றை தூக்கி உயர்த்தினான்.

> "இவர்கள்தான் நாளைக்கு வெளிநாட்டவர்களுக்கு எதிரி"

அதுவும் தூங்கப்போட்டிருந்த தலையை நிமிர்த்த முயன்றது. இருட்டினில் அதன்கண்கள் லைற்போல் தெரிந்தன.நான்....ஏன்? எதற்கு என்ற கேள்விகளை கேட்பதற்கு முன்னால் அவனானவே சொல்லத்தொடங்கினான்.

"இரண்டு மூன்று நாட்களாக இந்தப்பூனை இந்த இடத்தினில் அனாதரவாக நிற்கின்றது. மிருகவைத்தியசாலையில் கொண்டுபோய் இதை சேர்க்கப்போகின்றேன்...... ரெலிபோன் அடித்துள்ளேன் இன்னும் கொஞ்சநேரத்தில் அவர்கள் கொண்டு வரச்சொல்லியுள்ளார்கள்." என்றான்.

"இது யாருடைய பூனையோ தெரியாது. இந்த இரண்டு மூன்று நாட்களும் இங்கு இது நிற்பதால் சிலவேளை இதற்கு ஏதாவது சுகவீனமாகவும் இருக்கலாம்." என்று பூனையை தடவியபடியே தொடர்ந்து கூறிக்கொண்டிருந்தான் நில்ஸ்.

இந்த கிறில் பாருக்குள் நின்று அட்டகாசம் செய்யும் இந்த நில்சின் மனதிலா இப்படி ஒரு மெல்லிய உணர்வு.....?

சிலவேளையில் இவன் சைக்கிளில் நின்று செய்யும் சாகசங்களை எண்ணும்போது ஆத்திரமும் கூடவரும். அப்படியான முரட்டுத்தன்மையுள்ள நில்சின் மனத்திலா இப்படி ஒரு உணர்வு குடிகொண்டிருக்கிறது?. என்ற கேள்விகள் என்மனதைக்குடைய ஆரம்பிக்க இவனை மேலும் கேள்விகள் கேட்டால் ஏதாவது புதியதாய் செய்திகள் கிட்டலாம் என்ற ஒரு பெருவிருப்போடு அவனைக்கேட்டேன்.

"பூனை நின்றால் உனக்கென்ன? நீ ஏன் அக்கறைப்படவேண்டும்? இந்தக்கிறில்பாருக்குத்தானே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எத்தனைபேர் வந்து போகின்றார்கள்?"

நீ என்ன விளங்காததுபோல கேட்கின்றாய்? இங்கே வருபவர்கள் எல்லோரும் இதைக்கவனித்திருக்க மாட்டார்கள்.இங்கே நான்தானே ஒவ்வொருநாளும் வழமையாய் வருகின்றேன்.அதுதான் கவனித்துக்கொண்டேன். இவற்றிற்கு நாங்கள்தான் பொறுப்பானவர்கள்.

இங்கே மனிதர்கள் வாழ்வதற்கு எத்தனையோ வசதிகள், வாய்ப்புகள் இருக்கின்றது. மனிதன் தவிர்ந்த மற்றய உயிரினங்களுக்கு நாங்கள்தான் வசதியை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். இவற்றை நாங்களே கவனிக்காதுவிட்டால் யார் கவனிப்பார்கள்? இதை நான் மிருகவைத்தியசாலையில் அனுமதித்தால் இது சுகமடைவதோடு குறிப்பிட்ட சில நாட்களுக்குள் தனது சொந்தக்காரரிடம்போய்ச் சேர்ந்தும்விடும். இல்லையேல் இது இங்கு நின்றால் ஏதாவது வாகனங்களுக்குள் சிக்குண்டுபோய் இறந்தும்கூடப்போகலாம். இது இறந்தால் எவ்வளவோ பரிதாபம். இதன் சொந்தக்காரர்கள் எவ்வளவோ வேதனையடைவார்கள்" என்று இரக்கத்தோடு கூறிக்கொண்டே நடந்தான் நில்ஸ்.

இது இறந்தால்....... இதன் சொந்தக்காரர்கள்.........எவ்வளவோ பரிதாபம்......... என்ற வசனங்கள் என் காதுகளில் அதிர்ந்து கொண்டிருந்தது.

ஒன்றுமேபேசாது அவனோடுசேர்ந்து நடந்துகொண்டிருந்தேன். என்மனம்......எங்கேயோ....ஒரு கணம் போய்வந்தது.

தாயை இழந்த குழந்தைகள்.

குழந்தைகளை இழந்த பெற்றோர்கள்

புருசனை இழந்த விதவையர்.

துணைவியை இழந்த தபுதாரர்கள்.

தாய்தந்தையை காணாத குழந்தைகள்.

.......எத்தனை இறப்புகள் எங்கள் நாட்டில்?

என் தேசம்.

என் நாடு......!

எங்கேயோ வெறிச்சோடிக்கிடக்கின்றது.

"......அதுசரி நீயும் என்னோடு வைத்தியசாலைக்கு வருகின்றாயா?

உனது வீட்டுக்குபோகும் வழியில்தானே வைத்தியசாலையும்." என்று என்னை வினவினான்

"உன்னோடு சேர்ந்துவருகிறேன் ஆனால் வைத்தியசாலைக்கு வரமாட்டேன்." என்று கூறியபடியே அவனோடு தொடர்ந்துகொண்டிருந்தேன்.

போகும்வழியில் ஒரு இருக்கை.

லேசானபனியினால் சற்று ஈரலிப்பாக இருந்தது.

எங்கேயோ இருந்துவரும் தெருக்கம்பத்தின் ஒளியில் அது சில இடங்களில் மினுமினுத்தது. அதிலிருந்து கதைக்கவேண்டும்போல் தோன்றவே ஒன்றும்பேசாது அதில் நான் அமர்ந்து கொண்டேன்.

நில்சும் ஒன்றுமே கேளாது பக்கத்தில் அமர்ந்து கொண்டான்.

" அதுசரி உங்களுடைய நாட்டில் பூனைகள், நாய்கள் வீட்டுவிலங்குகளாக இருக்கின்றனவா? எனக்கேட்டான் நில்ஸ்.

எனக்கு முதலில் சிரிப்புத்தான் வந்தது. ஒரு கணம் அவனது கையிலுள்ள பூனையைப் பார்த்தேன். அவனது அரவணைப்பில் அது தூங்கிக்கொண்டிருந்தது.

www.tamilarangam.net

அங்கேயும் அவை வீட்டுவிலங்குகளாகத்தான் இருக்கின்றன. ஆனால் இந்த ஐரோப்பியசமூகம் மதிப்பதுபோல் அவைகள் அங்கு மதிக்கப்படுவதில்லை. மனிதர்களே அங்கு மதிப்பற்ற நிலையில்........மிருகங்களைப்பற்றி எண்ணியா பார்க்கவேண்டும்.

"இந்தநாட்டில் உயிர்கள் மிகவும் மதிக்கப்படுகின்றன.அதற்கு எந்தவிதப்பாகுபாடும் இல்லை. மனிதர்களாக இருந்தாலும் சரி வேறு உயிரினங்களாள இருந்தாலும் சரி அவற்றின் பெறுமதி ஒரேஅளவுதான்" என்றான் நில்ஸ் நிதானமாக.

"எங்கள் நாட்டில் மனித உணர்வுகள் எல்லாம் மரத்துப்போய்விட்டன.எங்களில் பலபேர்கள் மனிதர்கள் என்பததையே மறந்துவிட்டோம். ஏன்நாமும் மற்றவர்களைப்போல வாழமுடியவில்லை" என்றேன்.

"உங்கள்நாட்டில் நடக்கும் உள்நாட்டுயுத்தம் பற்றியும் அங்கே நடைபெறும் கொலைகள் பற்றியும் நான் அறிவேன். நீயும் உன்னைப்போன்றவர்களும் இங்கு அகதியாய் வாழும் நிலை பற்றியும் எனக்கு ஓரளவு தெரியும். அதைஎண்ணி அதிகம் சிந்திப்பதுண்டு" என்றான் நில்ஸ். உண்மையில் நில்சோடு கதைப்பது எனக்குப்பெரிய ஆச்சரியத்தைத்தந்தது. வியப்பாகவும்கூட இருந்தது.

நில்ஸ்ஒத்த வயதுள்ள பொடியங்கள் சின்ன மோட்டார்சைக்கிள்களிலும், சைக்கிள்களிலும் திரிந்து பெரிய பெரிய அட்டகாசங்கள் செய்வது வழக்கம். இவர்கள்தான் நாளைக்கு எங்களைப்போன்ற வெளிநாட்டவர்களுக்கு எதிரிஎன்றல்லவா இவ்வளவு நாளும் நினைத்துக்கொண்டிருந்தேன்.

இந்த இளம் உள்ளங்களில் எவ்வளவு பரந்த எண்ணங்கள், மனிதாபிமானங்கள்.

"பூனை இந்தக்குளிருக்குள் கஸ்ரப்படுகிறது. நான் இதை மிகவிரைவில் கொண்டுபோய் சேர்க்கவேண்டும். எப்போ இதை அவர்களிடம் சேர்க்கின்றேனோ அப்போதுதான் எனக்கு நிம்மதி." எனக்கூறிக்கொண்டபடியே நடக்கத்தைாடங்கினான்.

இவர்களை ஒத்தவயதில் எங்கள்நாட்டில் நான் சின்னனாய் இருந்த காலங்களில் நாய்கும் பூனைக்கும் கல்லெறிவது ஒரு விளையாட்டுமாதிரி. எத்தனையோ ஓணான்களை எறிந்து சாகடித்திருப்பேன்.

எத்தனையோ வண்ணத்துப்பூச்சிகளை கட்டி பறக்கவிட்டிருப்பேன். அது பறக்காவிட்டால் அதைப்பிய்த்து எறிந்து......என்ன இன்பம் அடைந்திருப்பேன்.

இவை எல்லாம் எமக்கு இனிமையானவை.

நினைத்துப் பார்க்க வேதனையாகவும் விரக்தியாகவும், வெட்கமாகவும் இருக்கின்றது.

குளிர் மெல்லமெல்லகூட உடலும் கொஞ்சம் கொஞ்சமாய் விறைக்கத் தொடங்கியதால் மெல்ல எழுந்து வீடுநோக்கி நடக்கலானேன்.

முற்றும்

● குறிப்பு: இந்த நில்ஸ் ஆளையே அடையாளம் காணமுடியாதஅளவிற்கு வளர்ந்து இப்போது ஒரு பெரிய சுப்ப மாக்கற்றில் வேலைசெய்கின்றான்.

---

**அடுத்த இதழில் 21 வயது நிரம்பிய தன்னினச்சேர்க்கைக்காரன் பற்றிய கதை.**

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

INTERNET

சௌந்தர். T

# செய்திகளுக்கான மாற்று ஊடகம்

இன்றைய உலகில் பல்வேறு தளங்களில் கம்பியூட்டர் தன் ஆதிக்கத்தை செலுத்தி வருகின்றது. குறிப்பாக செய்தித்தொடர்பு (kommunication)துறையில் இதன் தாக்கம் பெரியது. 1980களின் மத்தியில் நூல்நிலையங்களில் தேவையான செய்திகளைத் திரட்டுவதற்கு Database பாவனைக்கு வர ஆரம்பித்தது. இதன் மூலம் குறிப்பிட்ட நூல் இருப்பில் இருக்கிறதா அல்லது வெளியே போயுள்ளதா என்பதை அறியும் வாய்ப்பிருக்கிறது. இந்த நிலைமை 1980களின் இறுதியிலேயே டென்மார்க்கில் நாடு தழுவியளவில் எல்லா நூல் நிலையங்களுக்கும் கிடைத்தன.

ஆயினும், ஏறக்குறைய 10வருடங்களுக்கு முன்பே København நூல்நிலையம் (Central bibiliotekt) செய்தித்தளம் ஒன்றை (Artikel Basen) இயக்கி வந்துள்ளது. இந்த elektronic செய்தித்தளம் Dansk Artikelindeks வெளியீடாகும். இது வெளிவரும் சஞ்சிகைகள், தினசரிப்பத்திரிகைகளில் வரும் ஆய்வுகள், கட்டுரைகள், இலக்கியம், கலை, விஞ்ஞானம் பற்றிய விபரங்களை அடக்கிய பதிவுகளாகும். நாடெங்கும் உள்ள நூல்நிலையங்களினதும், நூலக பாவனையாளர்களினதும் தேவைக்காக உள்ளது.

தினசரிப்பத்திரிக்கையான Politiken தனது செய்திகளை Poltxtஎன்ற பெயரில் 1975லிருந்து பதிவு செய்துவந்துள்ளது. ஆரம்பத்தில் ஒரு வரையறை செய்யப்பட்ட செய்திகளை வெளிக்கொண்டுவந்த Poltxt இன்று முழுமையானளவில் வெளியிடுகின்றது. இதனை பல்கலைக்கழகங்களிலும், குறிப்பிட்ட சில கல்லூரிகளிலும் பெறும் வாய்ப்புண்டு. தனிநபர்களும் பாவனைக்கு அமர்த்திக் கொள்ளலாம். குறிப்பிட்ட ஓர் ஆய்வுபற்றியோ, கட்டுரைபற்றியோ என்ன விஷயம் எழுதப்பட்டுள்ளது என்பதனை அறிய இது ஓர் சிறந்த ஊடகமாகும்.

இந்த ஊடகத்தின் சமீபத்திய வளர்ச்சி Electronic networkஎன அழைக்கப் படுகின்றது. இதன் பெரிய அமைப்புத்தான் இன்று பரவலாக பேசப்பட்டு வரும் Internet. இதனுடே நாம் புதிய உலகத்தில் பிரவேசிக்கலாம்.

Internet என்பது databaseகளின் network ஆகும். கம்பியூட்டர் வைத்திருக்கும் ஒருவர் இதன்மூலம் உலகம் முழுவதும் தொடர்புகொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. தற்போது உலகில் 30மில்லியன் மக்கள் இதனை பாவனைக்கு அமர்த்தியுள்ளனர். இத்தொகை நாளுக்குநாள் பெருகிய வண்ணமுள்ளது. ஒவ்வொரு வருடமும் கம்பியூட்டர் பாவனை அதிகரித்தும் வருகிறது.

இந்த internet குறிப்பிட்ட ஒருவருக்கு சொந்தமானதல்ல என்பது குறிப்பிடத்தக்கது. இதில் பங்கு கொள்ளும் நாடுகள், அமைப்புக்கள், தனி நபர்கள் தங்கள் பங்கினை செலுத்துகின்றனர். இதன் மூலம் எமக்குத் தேவையான செய்திகளை உலகம் முழுவதிலுமிருந்து திரட்டலாம். internet வைத்திருக்கும் இன்னொரு நபருடனோ அல்லது அமைப்புடனோ தொடர்பு கொள்வதாயின் E.mail(எலற்றோனிக்கடிதம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூலம் செய்திகளைப் பரிமாறிக் கொள்ளலாம். E.mail சில நிமிடங்களில் சென்றடையும். தனிப்பட்டரீதியில் (personal) ஒருவருக்கு கடிதம் அனுப்புவதானால் குறித்த நபரே அதனை வாசிக்கலாம். அல்லது திறந்த கடிதமாக இருப்பின் குறித்த குழுவினர் வாசிக்கலாம்.

1960களில் அமரிக்க பாதுகாப்புஅமைச்சகம் (Pentagon) தனது செய்திகளை அமரிக்காவிலுள்ள பல மாநிலங்களுக்கு விரைவாக செய்திகளை அனுப்புவதற்காக இதனை ஆரம்பித்தது. 1960களில் அணுஆயிதப்போர் குறித்த பயம், செய்தித் தொடர்பில் புதியமாற்றத்தை ஏற்படுத்தியது. மாநிலங்களுக்கிடையேயான தூரம், நேர வேறுபாடு, பயணச்சிரமம் போன்றவற்றைக்கருத்தில் கொண்டு இந்த ஊடகம் பாவனைக்கு வந்தது. ஆயினும் உயர்மட்டத்திலான ஆய்வுகளுக்காக பல்கலைக் கழகங்களால் ஆரம்பத்தில் பாவிக்கப்பட்டது. 1980களில் internet வளர்ச்சியடைந்த தென்றும் 1990களில் மிக வேகமாக பரவத்தொடங்கியது.

கம்பியூட்டர், modem, telephone வைத்திருக்கும் ஒருவர் இதனை(internet) பயன்படுத்தலாம். டென்மார்க்கில் UNI-Cஎன்ற நிறுவனத்தின் மூலமாகவோ வேறு தனியார் நிறுவனங்களினுடாகவும் இதனைப் பெறலாம்.

UNI-Cயினரிடம் 12மாதங்களுக்கான internet சந்தா 2200Kr. ஆகும். இவர்கள் 30 நாட்கள் இலவசமாக பயிற்சிசெய்ய வசதி செய்தும் தருகின்றனர். பாவனையாளரின் பாவனைக்கென குறிப்பிட்ட ஓர் பெயருடன் ரகசியஇலக்கமும்(password) தரப்படும். இதனைப்பாவிப்பதில் எவ்விதமான செலவுமில்லை.

ஆயினும் Københavnனிலோ Aarhusலோ UNI-C super computerஉடன் தொலை பேசியில் தொடர்புகொண்டு வெளி உலகுடனும் தொடர்புகொள்வதால் தொலைபேசிச் செலவு ஏற்படும். லொஸ் ஏன்ஜலஸில் உள்ள data base உடன் தொடர்பு கொள்வதாயின் வெளிநாட்டுத் தொலைபேசிக்குரிய கட்டணம் செலுத்தத் தேவையில்லை. அது உள்ளூர் தொலைபேசிக்கட்டணமாகவே கருதப்படுகின்றது. ஆயினும் internet பாவிக்கும்போது நேரத்தைக் கவனித்தல் முக்கியமாகும். ஏனெனின் சிலநேரங்களில் மிகத் தொகையான பணத்தை தொலைபேசி கட்டணமாக செலுத்தவேண்டி ஏற்பட்டுவிடும்.

Netல் சிலபகுதிகள் பிரத்தியேக செலவாகும். உதாரணமாக commercialbase dialog. இதற்கு மாற்றீடான networkகளும் உண்டு. அவை லாபமற்ற அடிப்படையில் இயங்குகிறது. Institute for Global Communication (IGC) என்ற அமைப்பு பலமுன்னணி networkகளை கொண்டுள்ளது. அவற்றில் Peacenet, Econet போன்றவை பிரபலமானவை.

Internet மிகப்பெரியளவிலான, முடிவற்ற வசதிகளைக் கொண்டுள்ளது. நமக்குத் தேவையற்ற செய்திகளில் மூழ்கடிக்கப்படும் சந்தர்ப்பங்களும் இதில் உண்டு. ஒருவருக்கும் முழுமையான net தெரியாது, சிலவேளைகளில் நமக்குத் தெரியாத இடங்களிலுமிருந்து செய்திகள் கிடைப்பது அதிஸ்டமாகும்.

அமெரிக்க இதழான The Nationனில் வெளிவந்த Misc, Activism, Progressive(MAP) பற்றிய குறிப்பு குறிப்பிடத்தக்கது. இந்தப்பகுதிகளில் வரும் செய்திகள் உலகெங்கும்



( தொடர்ச்சி பக்கம் 25 )

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என் காதல் பொன்வண்டே....

எங்கள் ஊரில்
தெரு ஓரமாக ஒரு இலந்தை மரம்
அந்த மரத்தின்
பரந்து வளர்ந்த கிளைகளில்
மலர்ந்தே இருக்கும்
அதன் பசும் இலைகளில்
வாழ்ந்து வரும்
அந்த அப்பாவிப் பொன் வண்டு.

மொழு மொழு
என்ற தோற்றத்துடன்
கண்கள் எல்லாம்
கனவுகளைச் சுமந்து
பார்வை எல்லாம்
அந்த காதலை கலந்து
என் மனதை
தன் வசமாய் வைத்திருந்தது.

வரும் போகும்
நேரம் எல்லாம்
அந்த மரத்திற்கு கல்லெறிவதும்
எந்தன்
காதல் பொன்வண்டிற்கு கண்ணெறிவதும்
என்
அன்றாட கடமைகள் ஆனது.

நான்
மிகவும் நம்பியிருந்தேன்
எந்தன் கல்லெறிகள்
கனிகளை பெற்றுத் தராவிட்டாலும்
காய் களையாவது
நிட்சயம்
கனிய வைக்கும் என்று.

அன்றும்
வழமை போல
கல்லெறியும் என் கடமைகள்....
எதிர்பாராத விதமாக
பறந்து வந்தன கொடும் குளவிகள்
எந்தன் மனத்தையும்
தோழர்கள் பலரின் முகங்களையும்
குறிவைத்து சேதம் செய்தன

அந்த சம்பவத்திற்கு
அப்புறம் தான்
அந்த மரத்தை விட்டு
அப்பாலே செல்ல வேண்டும்
என்று தீர்மானம் செய்து கொண்டேன்.

உணவுத் தேவைக்காய்
ஒட்டிக் கொண்டும்
ஒரு போலி
உறவுக்காய் அடிமைப்பட்டும்
இந்த மரத்துடன்
வாழும் என் காதல் பொன்வண்டே
உந்தன் மீட்புக் குறித்து
மீண்டும்
உவ்விடம் நான் வருவேன்
வரும் போது
இனிமேல் கையில்
கற்களுடன் வரப் போவதில்லை....

அதுவரை
உந்தன் நிலைக்காய்
கவலைப்படுவதனைத் தவிர
வேறு என்னால்
ஆகக் கூடியது எது உண்டு
சொல் அன்பே?

– செல்வன்.

www.tamilarangam.net

## ஊசிகள்...

தொற்று நோய்க்கு
ஊசி போட
பால் குத்த
பள்ளிக் கூடத்திற்கு
வைத்திய வாகனம்!
கண்டு,
ஒப்பாரி வைத்தோம்.
காற் சட்டையுடன்
சிறு நீர் கழித்தோம்.
மல சல கூடத்தில்
மணிக் கணக்காகப்
பதுங்கிக் கொண்டோம்.
கையில்,
பூவரசம் கம்புடன்
கக்கூஸ்
கதவைத் திறந்த
காசிப்பிள்ளை,
தலைமை வாத்தியார்!
'தும்பு முட்டாஸ்
வாங்கித் தருவேன்'
என்று
வாக்கை நம்பி
பயம் நீங்கி,
வாத்தியார்
பின்னே
வீரநடை நடந்து......
வைத்தியரைச்
சரணடைத்து......
வாகனம்
போன பின்பும்,
ஒப்பாரி
முடியாத நிலையில்!
தும்பு முட்டாசும்,
ஒப்பந்தக் காற்றிலே
கரைந்து போக......
ஓ......
அந்த நாள்
சிந்தனை கூட
இன்று
இதமாக......
அந்த
ஊசிகள்
மீண்டும் ஏற்றப்படாதா?
என்ற
அங்கலாய்ப்புகள்!
பருவப்பாதையில்
அந்தப்
பழைய தழும்புகளை
தடவி,
பசுமை
நினைவுகளூடாக
ஏற்றப்படும்
புதிய
ஊசிகளின்
வலிகளை
மறந்து,
ஒற்றத்தரும்
பஞ்சைவிட
மென்மையில்
படர்ந்து......

வாழைப் பழத்தில்
ஊசியா?
சிலருக்கு
கைவந்த
கலையாயிற்றே!
வல்லரசுகள்
உதயமாகிட
இந்த
ஊசிகளே
பெரும் பங்காம்!
இதனால்
போதை ஊசி
ஏறிய
இளஞ் சந்ததியாக
பின்தங்கிய
நாடுகளாம்!
யப்பானின்
உற்சாகத்தை
சீர்குலைக்க
இரண்டு
அணுக்குண்டுகள்
போதவில்லையாம்!
கிரோசிமா,
நாகசாகி போல......
எல்லா
நகரங்களையும்
நாசஞ் செய்வோம்!
என்ற
அமெரிக்காவின்
ஒரே ஊசி!
அந்த
'உளவியல்
ஊசியால்' ......
அன்று,
யப்பானே
அடி பணிந்ததாம்!
'ஆயுதப் போரைவிட,
இந்த
உளவியல்
ஊசிக்கு,
வலிமை அதிகம்'
உலகம்
பேசிக் கொள்கிறது!
இந்த
ஊசிகள்
நாடளவில்
வரும் போது......
நமக்குச்
செய்திகள்!
வீடளவில்
வரும் போது......
குடும்பத்தைக் குலைக்க......
நண்பர்களிடையே
கலகமூட்ட......
தன்னை
மேவக் கூடாது
என்பதில்
கருத்தாக
இருந்து
தடம் புரட்ட......
அதற்காக
சமூகத் துரோகிப்
பட்டத்தை
பக்க பலத்துடன்
அமுல் படுத்த......
இந்த,
ஊசிகள்
மலேரியா
வடிவில்
வந்தால்
ஒழித்துக் கட்டலாம்!
தீர்க்க முடியாத
'எய்ட்ஸ்'
வடிவில் வந்தால்......

(தொடர்ச்சி பக்கம் 25)

www.tamilarangam.net

# கடிதம்

Sundskole
5600 Fåborg.

சஞ்சீவி ஆசிரியருக்கு,
குறுக்கெழுத்துப் போட்டி இலக்கம் 26 எழுதி அனுப்புகிறோம். இக் குறுக்கெழுத்து போட்டி சம்மந்தமாக சில கருத்துக்களை நாங்கள் சொல்ல விரும்புகின்றோம். இப் படிவத்தில் சில பிழைகள் உண்டு. குழம்பி வரும் சொற்களை நீங்கள் குழம்பி வந்திருக்கின்றது என்று எழுதவில்லை. இதனால் மாணவர்கள் ஆகிய நாங்கள் மிகவும் கஷ்டப்பட்டோம். இனிமேல் இப் பிழைகளைத் தவிர்த்துக் கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.

இப்படிக்கு
Sundskole
தமிழ் மாணவர்கள்.

---

'நிறப்பிரிகை'
இந்தியா.

அன்புத் தோழர்களுக்கு வணக்கம்,
'சஞ்சீவி' நேற்று வந்து கிடைத்தது. புலம் பெயர்ந்த தமிழர் நல மாநாட்டு மலரிலிருந்து கட்டுரைகளும், கவிதையும் எடுத்து வெளியிட்டமைக்கு நன்றி. மலர் சரியான படி விநியோகம் ஆகவில்லை. தமிழ் நாட்டில் உள்ள சஞ்சிகைகள் முற்றிலு-மாக இருட்டடிப்பு செய்துவிட்டன. தொடர்ந்து அகதிகள் பிரச்சனையில் எவ்விதமான செயல்பாடுகளை மேற்-கொள்வதென யோசித்திருக்கும் போது மீண்டும் ஈழத்தில் யுத்தம் தொடங்கி விட்டது வேறு சஞ்சலப்படுத்துகிறது.

சஞ்சீவியில் முழுக்க புலம் பெயர்ந்தோர் பிரச்சனைபற்றிய ஆதங்கம் வெளிப்படுகிறது. வேறு எந்த இதழிலும் காணமுடியாத அளவுக்கு இந்த அக்கறை சஞ்சீவியில் வெளிப்படையாக இருக்கிறது. குறிப்பாக மேலைநாடுகளில் வாழ்வோர் எதிர்கொள்ளும் கலாச்சார சிக்கல்கள் பற்றிய கவலைகள். இப்படியான பிரச்சனைகளை இந்தியத் தமிழர்கள் எதிர்கொள்கிறார்களா? அவர்களில் ஒருத்தர் கூட இப்படி எழுதி நான் பார்த்ததில்லை. உங்களது கலாச்சாரப் பிடிமானம் தான் இதற்கெல்லாம் அடிப்படையாக இருக்கிறது. வெளிநாடுகளில் தமிழர்கள் என்றாலே அது ஈழத்தமிழர்கள் தாம் என்பதாக ஒருமுறை இந்திராபார்த்தசாரதி என்ற எழுத்தாளர் குறிப்பிட்டார். க.ஆதவனின் மனவருத்தங்களை நாங்களும் பகிர்ந்து கொள்கிறோம். உலகத்தமிழ் மாநாடு என்ற பெயரில் தமிழ் நாடே ஒரு விழாமேடையாக மாற்றப்பட்ட சூழலில் தான் நாங்களும் இந்த மாநாட்டை நடத்தினோம். ஈழப்பிரச்சனையின்பால் அக்கறை குறைந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த மாநாட்டு மலர் பற்றி யாரும் ஈடுபாடு காட்டவில்லை. மலரில் வந்துள்ள வில்வரத்தினம், தமயந்தி கவிதைகள் மிகவும் அற்புதமானவை ஆனால் யாரும் அதனை கவனிக்கவில்லை. மலர் தொடர்பாக செலவிட்டதில் சுமார் எட்டாயிரம் போய் கடன் நிற்கிறது. இதைவிடவும் மலரால் உண்டாகுமென எதிர்பார்த்த கருத்துப் பிரச்சாரமும் தாக்கமும் அவ்வளவாக ஏற்பட வில்லையென்பது தான் வருத்தமாயுள்ளது.

சஞ்சீவியில் பெரிய அளவில் மலருக்குத் தரப்பட்டுள்ள முக்கியத்துவம் அங்குள்ள தமிழரிடையே இது பற்றிய ஒரு அக்கறையை உண்டு பண்ணினால் நன் றாக இருக்கும்.

நிறபேதம் பற்றிய கவிதை மிகவும் சிறப்பாக இருக்கிறது.யார் எழுதியது?

தோழமையோடு
ஆசிரியர் குழு சார்பாக
ரவிக்குமார்.

(23ம் பக்கத் தொடர்ச்சி)

மனிதமே!
ஊசிகளை,
இனங்காண்பதை விட,
என்றும்
பால் குத்தும்
பள்ளிப்
பருவத்து
சிந்தனைக்குள்
நிற்பது
பாதுகாப்பாகும்.
இல்லையா ?

*– பாரதிபாலன்.*

(25ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து கிடைப்பவை. இவை பெரும்பாலும் இன்றைய உலகின் பெரிய செய்தி ஸ்தாபனங்களால் இருட்டடிப்பு செய்யப்பட்டவையாக இருக்கும். 3,4 அசுரக் கம்பனிகளின் பிடியிலேயே இன்றைய தொடர்புச்சாதனங்கள் தங்கியிருப்பதால், அவை தமக்கு விரும்பிய செய்திகளை தமது கருத்தியல் அடிப்படையில் வெளியிடுகின்றன. இவை பொதுவுடமைக்கு எதிர்ப்பாகவும், முதலாளியத்திற்கு ஆதரவாகவும் உள்ளன.

MAPல் USA, இந்தியா, கியூபா, கிழக்கு திமோர் (Eastiomor) சோமாலியா, ஹைட்டி, இஸ்ரேல், பிரேசில், குவாட்டமாலா போன்ற நாடுகள் பற்றிய மறைக்கப்பட்ட ஆய்வுகள், செய்திகள் வெளியாகியுள்ளன.

உதாரணமாக:
1. இந்தியாவில் விவசாயிகள் கிளர்ச்சி
2. இந்தோனேசியாவில் ஊர்வலம் சென்றவர்கள் மீது இராணுவம் துப்பாக்கிச்சூடு.
3. கியூபா சென்ற அமெரிக்கசுற்றுலாப்பயணிகள் அமெரிக்காவில் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

MAP இரண்டுஅமெரிக்கர்களால் நடாத்தப்படுகின்றது. (Harel Barlilai, Rich Winkel) இது மாற்றீடாகவுள்ளன networkலிருந்தும், ஏனைய செய்தி ஊடகங்களிலிருந்தும் செய்திகளைத் திரட்டித்தருகின்றன. உள்ளே போகப்போக புதிய உலகம் வெளிப்படும்.

Internet ல் சென்சார் கிடையாது. அதற்கு எல்லையும் இல்லை. டென்மார்க்கிலுள்ள நூலகங்களில் internet பெறும் வசதிகள் செய்து தரப்படுகிறது. இதில் ஈடுபாடு உள்ளவர்கள் தங்கள் நூலகங்களுடன் தொடர்பு கொண்டு முயற்சிக்கலாம்.

www.tamilarangam.net

# ஆசிரியர் சிவாவுடன் ஒரு சந்திப்பு.....



பாலபண்டிதரும் பயிற்றப்பட்ட ஆசிரியருமான வல்லிபுரம் சிவசாமி அவர்களை சஞ்சீவியின் சார்பில் கலாச் சார இல்லத்தில் சனிக்கிழமை (24.04.95) சுமார் 11 மணியளவில் சந்தித்துக் கொண்டோம்.

ஏறக்குறைய 30 வருட கால ஆசிரியர்த் தொழிலை முடித்துவிட்டு தனது ஓய்வூதியக் காலத்தில் சில நெருக்கடிகளின் காரணமாக 1992ம் ஆண்டு டென்மார்க் வந்து சேர்ந்தார்.

*சஞ்:* நீங்கள் புலம் பெயர்வதற்கான காரணங்கள் ஏதாவது கூறமுடியுமா.....?

*சிவா:* இலங்கையில் 1985ம் ஆண்டு இலங்கை இராணுவத்தினர் எமது கிராமத்தையும் சுற்றிவளைத்து அட்டூழியங்கள் பலவற்றைச் செய்தனர் எமது அயல் வீடுகளில் வாழ்ந்த சில பெண்களும் இராணுவத்தால் துன்புறுத்தப்பட்டு கற்பழிக்கப் பட்டார்கள். அப்போது எனது மகள் ஒருத்தி தங்களுக்கு இப்படி ஏதாவது நடந்தால் தான் உயிரை விட்டு விடுவேன் என்றார். அந்த இக்கட்டான சூழ்நிலையில் எமது இடத்தை விட்டு வெளியேற வேண்டும் என முடிவு செய்ததால், தாழையடி வந்து அங்கிருந்து ஓடு படகு மூலம் இந்தியா வந்தடைந்தோம்.

அந்த நேரம் எனக்கேற்பட்ட அந்த உணர்வை ஒரு கவிதை மூலம் உங்களுக்குத் தருகின்றேன்...

*தாழையடி மணற்பரப்பில்*
*தவம் கிடந்து காத்து நிற்க*
*பாழை போல் படகொன்றில்*
*பாய்ந்து ஏறி உயிர் காக்க*
*கோழை இவர் ஓடுகின்றார்*
*கொல் என்று சிரிப்பது போல்*
*மாலைக் கடலலைகள்*
*மணற்பரப்பில் சிரித்தனவே......*

இக்கவிதை இன்று காலை சுமார் 10 மணிக்கு உங்களிடம் வருவதற்காக ரெயில்வே நிலையத்தில் காத்து நின்ற வேளை எழுதப்பட்டது. இதேபோல் அன்று கடலில் சென்ற வேளை என்னோடு படகில் வந்த குழந்தைகளும்.பெண்களும் பட்ட துன்பம் பற்றி அப்போது எழுதிய கவிதை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*அலை எழும்ப கடல் எழும்ப*
*அடிவயிறு தான் குலுங்க*
*மலையெழும்பும் கடல் நடுவில்*
*மகளிரெல்லாம் கண் பிதுங்க*
*வலையடைத்த மீனினங்கள்*
*வாயிரத்தம் சொரிவது போல்*
*வலசலமும் குழந்தைகட்கு*
*வந்ததம்மா குலைநடுங்க...*

***சஞ்:*** இலங்கை வாழ்கைக்கும் இந்திய வாழ்கைக்கும் என்ன வேறுபாடுகளை உணர்ந்து கொண்டீர்கள்?

***சிவா:*** மொழியாலும் கலாச்சாரத்தாலும் நாங்கள் பல இடங்களில் ஒன்று பட்டாலும் எப்படியோ இரண்டாம் தரப் பிரஜைகள் தான் நாம்.ஏதோ மற்றவர்களின் ஆதரவைத் தேட வேண்டிய நிலையே பெரிதும் இருந்தது. இருந்தாலும் இந்துக் தலங்களை தரிசிப்பதற்கு விசேடமான இடம் இந்தியா. அந்த சந்தோசம் நிறையவே இருந்தது.

***சஞ்:*** அப்படியாயின் நீங்கள் ஏன் டென்மார்க் நாட்டுக்கு புலம் பெயர்ந்தீர்கள்?

***சிவா:*** இந்தியாவில் இருந்த வேளை எனது பெறா மகன் ஒருவன் என் வீட்டுக்கு வந்து விட்டு சென்ற வேளை இந்தியப் பொலிசாரால் கைது செய்யப்பட்டான். அந்தப் பிள்ளையிடம் எந்தவிதமான பத்திரங்களும் இருக்கவில்லை. அவனை இயக்கமென்று நினைத்து நான் தான் அவருக்கு ஆதரவு கொடுக்கிறேன் என்று இந்தியப் பொலிஸ் படை அடிக்கடி என் வீட்டிற்கு வந்து சோதனை போட்டார்கள். அவர்களின் நெருக்கடி அதிகரிக்க அதிகரிக்க இருந்த இடத்தை விட்டு இன்னொரு இடத்துக்கு மாறி சில நாட்களின் பின்னர் கொழும் வந்து சேர்ந்தேன். கொழும்பு வந்த பின்னர் இந்தியாவில் இருந்து கிடைத்த தகவல்கள் மூலம் இந்தியப் பொலிஸார் மீண்டும் வந்து சோதனை போட்டதாலும் என்னைத் தேடியதாலும் இந்தியா திரும்பி போகமுடியாத நிலை ஏற்பட்டதால் ஏற்கனவே எனது பிள்ளைகள் டென்மார்க்கில் இருந்ததால் அவர்களின் உதவியுடன் டென்மார்க் வந்து சேர்ந்தேன்.

***சஞ்:*** இந்த டென்மார்க் மண்ணில் வந்து இறங்கியவுடன் உங்கள் அனுபவம் எப்படியிருந்தது ?
***சிவா:*** முதலில் எல்லாவிடயங்களும் மிகவும் வித்தியாசமாகவே இருந்தது. கலாச்சாரநிலை, காலநிலை , மொழி, மனிதர்கள் எல்லாமே புதியவை தான். செஞ்சிலுவைச் சங்கத்தினர் அகதியாய் வருபவர்களை மிகவும் அன்பாக நடாத்துவதை எண்ணும் போது வேறு நாடுகளில் அகதிகளாக புலம் பெயர்ந்தோர் படும் அவஸ்த்தைகளை அறியும் போது இந்த மண்ணில் இறங்கியதைவிட்டு நான் மிகவும் சந்தோசம் கொள்வதோடு இந்தக் கண்ணியமான அரசாங்கத்தை நான் பெரிதும் பாராட்டுகிறேன். குடும்பத்தினரைக் கூப்பிட்டுக் கொடுப்பதில் மிகவும் சிறந்த நாடு இது தான். மற்றைய நாட்டு நிலைமைகள் பற்றி எல்லோருக்கும் தெரியும்தானே.

***சஞ்:*** மொழிப்பாடசாலை அனுபவம் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன். ஒரு ஆசிரியர் மீண்டும்

www.tamilarangam.net

மாணவனாய் வந்திருக்கும் அனுபவம் பற்றி ?

*சிவா:* இந்த நாட்டு மக்களோடு பழகுவதற்கு முதல் முக்கியமான ஊடகம் மொழிதான். மொழியை தெரிந்து கொள்ளத்தான் இந்த நாட்டு வாழ்க்கைமுறைகள், பழக்கவழக்கங்கள், கலாச்சாரம் போன்றவற்றை அறியக்கூடிய வாய்புகள் கிட்டுகின்றது. மொழி படிப்பதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தை எண்ணி மிகவும் சந்தோசமடைகின்றேன். இந்த வயதில் படிப்பது சிரமந்தான். இருந்தாலும் படிக்கின்ற பத்துச்சொல்லில் ஒரு நாலுசொல்லை தெரிந்துகொண்டாலே போதுமானதே.

*சஞ்:* எங்களுடைய பாடசாலை வாழ்க்கை முறைகளுக்கும், இந்த நாட்டு பாடசாலை வாழ்க்கை முறைகளிலும் என்ன,எப்படியான வித்தியாசங்களை நீங்கள் காண்கிறீர்கள்?

*சிவா:*மொழிப் பாடசாலையில் எல்லோரும் வளர்ந்தவர்களாய் இருப்பதால் இங்கே ஒரு மாதிரியான கட்டுப்பாடுகளையும் கடைப்பிடிக்க முடியாது. வகுப்பில் இருப்பவர்கள் ஆசிரியரின் அனுமதியில்லாமல் வெளியில் எழுந்து போய் புகைபிடிக்கின்றார்கள். ஆசிரியரை மதிக்க வேண்டிய அவசியம் இல்லாவிட்டாலும் அனுமதி கேட்டுப் போகலாம் தானே. இந்த நிலை தான் இங்குள்ள பாடசாலைகள் எல்லாவற்றிலும் இருப்பதை அறியும் போது எனக்கு மன வேதனையாக இருக்கிறது . எங்களுடைய நாட்டில் கண்டிப்பு என்பது கடினமாக இருக்கிறது. என்ன பிழைக்கு என்ன தண்டனை கொடுக்க வேண்டும் என்பது எங்கள் பல ஆசிரியர்களுக்குத் தெரியாமல் இருக்கிறது. ஆசிரியர்கள் தங்கள் மனநிலைக்கு ஏற்றவகையிலேயே தண்டனை வழங்குகிறார்கள். அவர்களுடைய வீட்டுப் பிரச்சனைகள் , தனிப்பட்ட பிரச்சனைகளுக்கு ஏற்றவாறு தண்டனையும் கடுமையாகிறது . பொதுவாக எல்லா விடயத்துக்கும் அடிப்பார்கள். இதனால் மாணவர்கள் மத்தியில் ஒழுங்கு முறையேற்பட்டாலும் அவர்கள் மனதில் பல பாதிப்புகள் ஏற்படுவதோடு பல உளவியல் பிரச்சனைகளும் தோன்றுகின்றது.

*சஞ்:* இந்த நாட்டுப் பாடசாலைகளில் கூடுதலான சுதந்திரம் பல தவறான விடயங்களுக்கு வழிகோலுகின்றது. எங்களுடைய நாட்டில் அதிகமான கண்டிப்பும் பல பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது. இதிலே இரண்டுமில்லாமல் எப்படியாக இருக்க வேண்டுமென நீங்கள் நினைக்கின்றீர்கள் ?

*சிவா:* எங்களுடைய நாட்டில் மாணவர்களின் மனநிலையை அறிந்து ஆசிரியர்கள் கல்வியைக் கொடுக்க வேண்டும். அவர்களின் ஒத்துழைப்புடன் தான் கல்வி கற்றுக் கொடுக்க வேண்டும். அதே போல் இங்கேயும் மாணவர்களுக்கென ஒரு கட்டுப்பாடு இருக்க வேண்டும். ஆசிரியரை மதிக்கத் தெரிய வேண்டும். இப்படியான வகையில் பாடசாலைகள் அமையுமானால் பிரச்சனைகள் தோன்ற வாய்ப்பு இருக்காது.

எங்களுடைய நாட்டில் மாணவ மாணவிகளின் முகத்தைப் பார்த்தவுடன் அவர்களுக்குள் ஏதோ பிரச்சனை இருக்கு என்பதையறிந்து கொள்கின்றோம். சில பிள்ளைகள் தாய் தகப்பனுக்கு சொல்ல முடியாத எத்தனையோ பிரச்சனைகளை மனம் திறந்து எங்களிடம் சொல்லியிருக்கின்றாகள். எத்தனையோ பிரச்சனைகளை நாங்கள் தீர்த்திருக்கின்றோம். சில பேருக்கு திருமணம் கூட சேர்த்து வைத்திருக்கின்றோம்.

எங்களுடைய நாட்டில் புகைத்தல் என்பது தீயபழக்கமென்றும்,மாணவர்கள் புகைக்கக் கூடாது என்று சொல்வதோடு சட்டரீதியாக்கப்பட்டுள்ளது. புகைப்பிடித்தல் என்பதை பரந்து பார்க்குமிடத்து, புகைப்பிடித்தல் புகைப்பிடிப்பவர்களுக்கு மட்டுமல்லாது மற்றவர்களையும் பாதிக்குமொரு விடயமாகும். இன்று வளர்ச்சியடைந்த நாடுகளில் பொது இடங்கள், வேலைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலங்கள் போன்றவற்றில் புகைப்பிடித்தல் தடை செய்யப்பட்டு வருகின்றது. இன்னும் பல இடங்களில் தடை செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இது வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

***சஞ்:*** எங்களுடைய நாட்டு குடும்ப வாழ்க்கை முறைக்கும், இந்த நாட்டு குடும்ப வாழ்க்கைக்கும் என்ன வேறுபாடுகளைக் காணுகின்றீர்கள்...?
***சிவா:*** எங்கள் நாட்டில் குழந்தைகளின் தேவைகள் பல பெற்றோரின் அனுசரணையோடுதான் நடைபெறுகின்றது. ஆனால் இந்த நாட்டில் தாங்களாகவே தங்கள் வாழ்க்கையைத் தீர்மானிக்கிறார்கள். தாய் தகப்பனின் அனுசரணையோடு தேடிக்கொள்ளும் வாழ்க்கை சரியானதா அல்லது இவர்களது இந்த வாழ்க்கை சரியானதா என்பதை நான் தெளிவாகச் சொல்ல முடியாது. இதன் பலாபலன்களை நாம் தீர்மானிக்க முடியாது. ஏன் என்றால் எங்களில் பல பேர் இவர்களது வாழ்க்கை முறையை பின்பற்றத் தொடங்கியிருக்கின்றார்கள். உதாரணமாக: எனக்குத் தெரிந்த ஒரு டெனிஸ் பெண்மணிக்கு மூன்று குழந்தைகள், ஆனால் அவர் திருமணம் முடிக்கவில்லை என்கிறார்கள். தகப்பன் இல்லாத எத்தனையோ பிள்ளைகள் தகப்பனின் ஆதரவைத் தேடி அலைவதை நான் கண்டுகொண்டிருக்கின்றேன்.

பல இடங்களில் தாய் இல்லாத குழந்தைகளையும், தகப்பன் இல்லாத குழந்தைகளையும் கண்டிருக்கின்றேன். ஆனால் இவர்களுக்கு தாய் தகப்பன் இருப்பதாகக் கேள்விப்படுகின்றேன். அவர்கள் இன்னொரு இடத்தில் குடும்பம் நடத்துகின்றார்கள். இவர்கள் வளர்ந்து வரும் வேளையில் தாய் தந்தையரின் ஆதரவு இல்லாமல் போவது எனக்குப் பெருவேதனையைத் தருகின்றது. இங்கே தாய் தந்தைக்கும் குழந்தைகளுக்கும் உள்ள இடைவெளி எவ்வளவு என்று சொல்ல முடியாது.

இங்கே எல்லோருக்கும் ஒரேமாதிரியான அரசாங்கம் மானியம் வழங்கப்படுவதால் இங்கே வாழும் தமிழ்க்குடும்பங்கள் மத்தியிலும் இதே மாதிரியான காற்றலைகள் வீசுவதை உணரக்கூடியதாக இருக்கின்றது.

***சஞ்:*** ஏற்கனவே பல தமிழ்க்குடும்பங்கள் பிரிந்து வாழ்வது பற்றி நீங்கள் அறியவில்லையா...?

***சிவா:*** சமத்துவமான வருமானத்தைப் பெறுவதால் நாம் எதையும் சாதித்து விடலாம் என்ற ஒரு தப்பான எண்ணம் எல்லோர் மனதிலும் ஏற்பட்டிருக்கின்றது. தற்போது இது நல்லது என்று தெரிந்தாலும் காலப்போக்கில் வளர்ந்து வரும் குழந்தைகள் சமுதாயத்தில் பாரதூரமான விளைவுகள் வரும் என்பதை தாய் தந்தையர் உணரவேண்டும். சில இடங்களில் சில குழந்தைகளின் மனோ நிலை பாதிக்கப்பட்டிருப்பதை கேள்விப்பட்டிருக்கின்றேன், சில இடங்களில் நேரில் கண்டு மிகவும் மனவேதனை அடைந்திருக்கின்றேன்.

எஞ்சியிருக்கும் ஏனைய பெற்றோருக்கும் பிள்ளைகளின் நல்வாழ்க்கையைக் கருத்தில் கொண்டாவது இப்படிப்பட்ட பிரச்சனைகளை களைத்து அன்பு கலந்த இல்லற வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும்.

இதையே திருவள்ளுவரும், ***மனைத்தக்க மாண்புடையளாகித் தற்கொண்டான்***
***வனத்தக்காள் வாழ்க்கைத்துணை***

இதே போல் ஆடவரும், ***இல்லாள் அகத்திருக்க***
***இல்லாதது ஒன்றில்லை***

www.tamilarangam.net

சந்தர்ப்பத்துக்கு ஏற்றமாதிரி வழி தவறி நடக்காமல் இருந்தால் குழந்தைகளும் அவர்களைப் பின்பற்றி வளரவும். நல்லதொரு சமுதாயத்தை தாய் நாட்டுக்காகக் கட்டியமைக்க முடியும்.

*சதீ:* இங்கு வளரும் தமிழ்க் குழந்தைகள் எங்கள் மொழியையும் கலாச்சாரத்தையும் மறந்து வாழும் இச்சூழ்நிலையில் எங்கள் குழந்தைகள் மத்தியில் கலாச்சாரத்தையும், மொழியையும் வளர்த்தெடுக்க நாம் என்ன செய்ய வேண்டுமென நீங்கள் நினைக்கின்றீர்கள்?

*சினா:* இங்கு கலாச்சாரம் சம்பந்தமான சங்கங்கள், மன்றங்கள், இரவுப்பாடசாலைகள் போன்றவற்றை உருவாக்க வேண்டும். பல்வேறுபட்ட கலைநிகழ்ச்சிகளை வளர்ச்சியூட்டும் வகையில் நடாத்தப்பட வேண்டும். இவையெல்லாவற்றையும் பெற்றோர்களே முன்னின்று செய்ய வேண்டும். ஏனென்றால் பெற்றோர்கள் இரவுபகலாக வேலை செய்வதால் பிள்ளைகளோடு பழகுகின்ற நேரம் குறைவாகவே இருக்கின்றது. இதனால் பிள்ளைகளுக்கு பெற்றோரின் அன்பு,ஆதரவு கிடைக்காமல் போவதால் பிள்ளைகள் தாங்களாகவே ஒவ்வொரு காரியங்களையும் முடிவெடுக்கின்ற வாய்ப்பிருக்கின்றது. இது எங்கள் மொழியிலும், கலாச்சாரத்திலும் பாதிப்பு ஏற்படுவதை பல இடங்களில் காண்கின்றேன். காரணம் பிள்ளைகள் தன்னுடைய தாய்மொழியில் பேசவோ விளையாடவோ சந்தர்ப்பம் குறைவாவேயுள்ளது. சில இடங்களில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் தனித்து டெனிஸ் மொழியில் கதைப்பதை பெருமையாக நினைத்துக் கொள்கின்றார்கள். அப்படி எல்லோரும் நினைத்து விட்டால் காலப்போக்கில் தமிழ் மொழியோடு தமிழ்க் கலாச்சாரமும் சேர்ந்து அழிந்தல்லா போய்விடும்.

*பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்*
*நற்றவ வானிலும் நனிசிறந்தனவே*

இதன் கருத்து பெற்ற தாயும், பிறந்த நாடும் தேவலோகத்திலும் விடச் சிறந்தது என ஆற்றோர் கூறுகின்றனர். எனவே நாம் எமது தாய் மொழியை மறக்க நினைப்பது தாய்க்குச் செய்யும் துரோகத்துக்கு ஒப்பாகும்.

*செந்தமிழ் நாடென்னும் போதினிலே*
*இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே*

என்று பாரதியார் கூறுகின்றார். இப்படிப்பட்ட தேன் போன்ற தமிழ்மொழியை புறக்கணிப்பது தமிழ்மக்களால் போற்றக்க கூடிய காரியமல்ல. நான் குறிப்பிட்ட இந்த விடயத்தை பெற்றோர்கள் எந்தளவிற்கு சிந்திக்கப் போகின்றார்களோ தெரியாது. காரணம் இங்கு வாழும் பெரும்பாலான பெற்றோர்கள் தங்களுக்கு கிடைக்கும் ஒரு குரோனரை எப்படி பத்துக் குரோனராக மாற்றலாம் என்பதையே குறிக்கோளாக கொண்டிருக்கின்றார்களே ஒழிய எமது மொழி,கலாச்சாரம் பற்றி யார் சிந்திக்கின்றார்கள்.

டென்மார்க் வாழ் தமிழ் மக்கள் டெனிஸ் மொழியையும் பேசவேண்டும். அதே நேரம் தமிழ் மொழியையும் பேச வேண்டும். அதே நேரம் இங்கு வாழும் மழலைச் செல்வங்களின் வாயில் தமிழாகிய தேன் சிந்திக் கொண்டிருக்க வேண்டும் என்பதே என் விருப்பமாகும். இது தமிழ்த் தாய்க்குச் செய்யும் சீரிய பணியாகும்.

*செயற்கரிய செய்வர் பெரியர் – சிறியர்*
*செயற்கரிய செய்யலாகாதார்.*

*– திருக்குறள்.*

*சதீ:* நீங்கள் இங்கு நிரந்தர வாழ்க்கையை வாழ விரும்புகின்றீர்களா ?

*சினா:* தற்போதைய சூழ்நிலையில் இந்தியாவில் வாழும் எனது குடும்பம் இங்கு வர வேண்டும் என்று விரும்புகின்றேன்.எங்களுடைய நாட்டு மக்களுக்கு, எனக்குத் தெரிந்தவர்களுக்கு நான்

www.tamilarangam.net

உதவ வேண்டும் என்று விரும்புகின்றேன். இறுதிக்காலத்தில் அங்கு சென்று இந்த நாட்டு மக்களின் வாழ்கை முறைகள், கலாச்சாரம், பண்பாடு, பற்றி அங்கிருப்பவர்களுக்குச் சொல்ல வேண்டும். எங்களையும் எங்களைப் போன்ற வேறு நாட்டுஅகதிகளையும் இவர்கள் எப்படிக் கவனிக்கின்றார்கள், கவனித்தார்கள் என்பது பற்றியும் எடுத்து இயம்ப வேண்டும் என்பது எனது பெருவிருப்பமாகும். ஈழத்தில் சண்டை நடைபெறுவது எனக்கு விருப்பமில்லை, அங்கே தமிழ்மக்கள் அநியாயமாய்ச் சாவதை நான் விரும்பவில்லை. இங்கே ஆடம்பரமாய் வாழலாம் தான். ஆனால் தாய் நாட்டில் கிடைக்கும் மன அமைதி, நிம்மதி இங்கே கிடைக்காது .

***சஞ்:*** உங்களின் இளமைக்காலங்களில் (பாடசாலைக்காலங்களில்) அரசியலில் ஈடுபாடு இருந்ததா ?

***சிவா:*** அரசியலில் என்பதை விட நாட்டிலும் மொழியிலும் நிறையப்பற்றுக்கொண்டே வாழ்ந்தேன்.

***சஞ்:*** .இலங்கையில் எப்படியான தீர்வு அமைய வேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்கள்...?

***சிவா:*** சிங்களமக்களும் தமிழ்மக்களும் சகல உரிமைகளையும் பெற்று ஒருவரை ஒருவர் மதித்து வாழக்கூடிய நிலையில் அமைய வேண்டும் என்று விரும்புகின்றேன் இரண்டு இனமக்களும் சகோதரர்களாக வாழ வேண்டும் . சிங்கள மக்களிலும் எத்தனையோ பேர் பண்புள்ளவர்களாக இருக்கின்றார்கள் தானே.

***சஞ்:*** அப்படியாயின் போராட்ட காலத்திற்கு முன்பு இருந்தது போன்ற ஒரு வாழ்க்கை முறையை,அமைப்பு முறையை விரும்புகின்றீர்களா...?

***சிவா:*** நிச்சயமாக அப்படியானதொரு வாழ்க்கை முறையை நான் விரும்பவில்லை, அன்றையகால கட்டத்தில் கூடசாதரணமாக ஒரு பயிற்சிக் கலாசாலைக்கு தெரிவு செய்யப்படுவதில் தமிழ் ,சிங்கள, முஸ்லீம் என்ற வேறுபாடுகள் பாகுபாடுகள், மாகாண ரீதியாகவும், புள்ளிவிபர அடிப்படையிலும் நிறையவே காணப்பட்டது. இதனால் பெரும்பாலான தமிழ் மக்கள் ஒடுக்கப்பட்டார்கள், இதன் விளைவுகள் தான் இன்று போராட்டமாக மாறியிருக்கின்றது, ஆரம்பத்தில் அரசாங்கம் இதைக்களைந்திருந் தால் இன்று இப்படியான ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்க மாட்டாது .என்னுடைய வயதைப் பொறுத்தவரையில் சமாதானமூலம் தீர்வு ஏற்படுவதையே விரும்புகின்றேன். துடிப்புள்ள இளைஞர்கள் இதைப் போராட்ட மூலம் தீர்வுகாண விரும்புகின்றார்கள்.

*மயிர் நீப்பின் வாழாக்கவரிமான்*

என்ற வள்ளுவரின் கூற்றுப் போன்ற இளைஞர்கள் தாய் நாட்டுக்காக தங்கள் உயிரை நீக்குகின்றார்கள், நாங்கள் எங்கள் உயிரைப் பாதுகாப்பதற்காக இங்கு வந்திருக்கின்றோம், அவர்கள் நாட்டுக்காக உயிர்நீப்பதற்கு அங்கு தங்கியிருக்கின்றார்கள்,

***சஞ்:*** வளர்ந்துகொண்டுவரும் நாஜிகள் பற்றி நீங்கள் ஏதாவது அறிந்திருக்கின்றீர்களா,,,,,,,?

***சிவா:*** நான் இங்கு வந்திறங்கிய ஆரம்பகாலத்தில் ஏறக்குறைய எழுபதுவீதமான மக்கள் எம்மை அன்போடு வரவேற்றதை உணரக்கூடியதாக இருந்தது, ஆனால் இப்போது பலபேர் எம்மை கடுங்கோபமாகவும் வெறுப்பாகவும் பார்ப்பதை உணரக்கூடியதாக இருக்கின்றது, ஏன் என்றால் சில வெளிநாட்டவர்களின் நடவடிக்கைகள் பல டெனிஸ் மக்களின் மனதைப்புண்படுத்தும் வகையில் நடந்து கொண்டிருக்கின்றார்கள். இதன் காரணமாக வெறுப்பு துவேசம் அதிகம் வளர்ந்து கொண்டு போகின்றது.

இவற்றை விட வெளிநாட்டவர்களை எதிர்க்க வேணும் என்ற ஒரே குறிக்கோளோடு இருக்கும் குழுக்களும் இங்கே இருக்கின்றது. அதாவது வெளிநாட்டவர்கள் ஏன் வந்தார்கள்

www.tamilarangam.net

என்பதை அறியாமல் தங்களுடைய வருமானத்தைச் சுரண்டுகின்றோம். கலாச்சாரத்தைச் சீரழிக்கின்றோம் என்று காரணத்தைக் காட்டி நிறத்துவேசத்தை வளர்க்கின்றார்கள். இதற்கு நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது. இதற்காக அரசாங்கம் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏன்......?எங்கள் மத்தியிலும் இப்படியான துவேசங்கள் இருக்கின்றது தானே. அங்கேதான் இவைகள் காணப்பட்டாலும் அகதியாக் குடியேறிய இந்த இடங்களிலுமல்லவா இந்தத் துவேசம் காணப்படுகின்றது. இதை இங்கேயும் வேரூன்ற விடாமல் கவனமாக இருக்க வேண்டும். நாங்கள் எல்லோரும் தமிழ் மக்கள்,ஒரே இனத்தவர்கள் என்ற உணர்வோடு வாழப் பழக வேண்டும்.எங்கள் குழந்தைகள் மனதிலும் இந்த உணர்வையேற்படுத்த வேண்டும். ஒவ்வொரு தமிழர்களும் இதைக் கடைப்பிடித்தால் ஒரு பண்பான சமூகத்தை உருவாக்க முடியும். அப்படியான ஒரு கட்டுக் கோப்பின் கீழ்த்தான் எல்லோரும் ஒற்றுமையாக வாழமுடியும்.

*ஒன்று பட்டால் உண்டு வாழ்வு – நம்மில்*
*ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு*
*நன்றிது தேர்ந்திடல் வேண்டும் – இந்த*
*ஞானம் வந்தால் பின் நமக்கென்ன வேண்டும்.*

என்ற பாரதியார் கூற்றுக் கிணங்க டென்மார்க் வாழ் தமிழ் மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு நல்ல சமுதாயத்தைக் கட்டியெழுப்புவோமாக.

*சஞ்:*இறுதியாக சஞ்சீவி வாசகர்கட்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

*சிவா:*இங்கே கொலன்ரப்போ வாழ் தமிழ் மக்கள் ஆங்காங்கே சிதறியிருப்பதை காண்கிறேன்.இவர்களுக்குள் ஒரு கூட்டுறவு முறையை காணமுடியவில்லை. சிறுவர்களுக்கான கழகங்களோ, மன்றங்களோ இங்கே இல்லை. சிறுவர்கள் தான் எதிர்காலத்தில் நல்ல தொரு சமுதாயத்தைக் கட்டி எழுப்பக் கூடியவர்கள்.இங்கே பிரிவினை வாதச் சக்திகள் வேரூன்றி இருப்பதைக் கண்டு வேதனையடைவதோடு இந்தக் கலாச்சார இல்லத்தில் தமிழ்–டெனிஸ் நட்புறவுச் சங்கமானது தொடர்ந்து இயங்கி வருவதையிட்டு பெருமை கொள்கிறேன். அதே நேரத்தில் அறிவாளிகள், கலைஞர்கள் சேர்ந்து ஒத்துழைப்பதையும் காணமுடியவில்லை. நாம் தாய் நாட்டைவிட்டு இங்கு குடியேறினாலும் கொலன்ரப்போ நகரில் குடியிருப்பவன் இதுவும் எங்கள் இடம் என்ற உணர்வோடு வாழ வேண்டும். இந்த நகரத்தில் இயங்கும் தமிழ் டெனிஸ் நட்புறவுச் சங்கத்தினரையும் சஞ்சீவி ஆசிரியர் குழுவினரையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

இந்த சஞ்சீவி பத்திரிகை நொறியாற்றல், கலாச்சாரம் ஆகியவற்றையும்,ஒருவருடைய விசேடமான ஆற்றலையும் எல்லா மக்களுக்கும் வெளிப்படுத்தக் கூடிய சாதனமாக இருப்பதையிட்டு பெருமைப்பட்டுக் கொள்கிறேன்.

சஞ்சீவி நீடூழி வாழ வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

*தென்பொதிகைக் கற்பகமே தீந்தமிழே உண்ணோடு*
*வம்பதனைப் பேசி நான் வாழ்நாள் கழிக்காமல்*
*கொம்பனையாய் மின்னே கொடியிடையாய் நின் அசைவின்*
*தென்பதனைப் பெற்றிட நீ தேற்றுவாய் சஞ்சீவி.*

*நன்றி.*

சிரமம் பாராது இவ்வளவு நேரமும் சஞ்சீவிக்காக நேரத்தை ஒதுக்கி இந்த பேட்டியை அளித்தமைக்கு சஞ்சீவியின் சார்பிலும், வாசகர்கள் சார்பிலும் ஆசிரியர் சிவா அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

– சஞ்சீவி.

www.tamilarangam.net

# வந்தவள் வராமல் வந்தால்.....

– பார்த்திபன்.

(முதல் பாகம்)

'ஹலோ'

...........

'ஹலோ'

இரைச்சல் உடனான கசமுச தொடர்ந்து.

'ஹலோ'

'நான் ஜேமனிலையிருந்து செல்வம் கதைக்கிறேன் மைதிலியோட கதைக்க லாமோ'

'நான் இஞ்ச மாக்கண்டு கதைக்–கிறனே். என்ன மாதிரி? காசலுவலுகள் முடிஞ்சுதோ?'

'அண்ணை..... ஏற்கெனவே பன்ரண்டுதான் பேசிமுடிச்சது.பிறகு சிங்கப்பூரிலை நிண்டு கேளண்டு ரண்டனுப்பச்சொன்னை யள் அனுப்பினனான். இப்ப போனில் மொஸ்கோவிலை நிண்டு கொண்டு திரும்பியும் ரண்டு கேக்கிற யள் நான் எங்கேயண்ணை போறது....?

'எனக்கு விளக்கங்கள் வேண்டாம். நான் தோண்டி செய்யேல்ல. ஏஜென்சி வேலை செய்யிறன். காசை தந்தா வாற வெள்ளி வெளிக்கிடுற குறுப்பில உம்மட தங்கச்சியை அனுப்பி விடலாம். இல்லையெண்டால் அவளை இஞ்ச விட்டிட்டு நாங்கள் வெளிக்கிடுவம் . என்ன மாதிரி......?'

பொங்கிய ஆத்திரத்தை பற்களுக்குள் இறக்கி...கடித்தான்.செல்வம்.காட்டமுடியவில்லை.அவன் பயணக்கைதியை வைத்திருக்கிறான்.ஒண்டுமேசெய்யேலா

'அண்ணைகோவியாதையுங்கோ ஒண்டஞ்சு மாறிப்போட்டன் எப்படியும் சாமத்

'நாளைக்கிரவுக்கிடையிலை எனக்காசு கிடைக்க வேணும்.'

'ஓமண்ணை கட்டாயம்கிடைக்கும் தங்கச்சியோட ஒருக்காகதைக்கலாமோ?

'அண்ணா.....'

'மைதிலி '

மொஸ்க்கோவில்மைதிலி அழ இங்கே செல்வத்துக்கு துக்கம் தொண்டையை அடைத்தது . கதைக்க கஸ்ரமாயிருந்தது. போனில் காசு மட்டம்படு வேகமாய் குறைந்து கொண்டிருந்தது. கெதியில கூடவப் போகுது

'அண்ணா.....'

'மைதிலி '

மொஸ்க்கோவில்மைதிலி அழ இங்கே செல்வத்துக்கு துக்கம் தொண்டையை அடைத்தது . கதைக்க கஸ்ரமாயிருந்தது. போனில் காசு மட்டம்படு வேகமாய் குறைந்து கொண்டிருந்தது. கெதியில கூடவப் போகுது

'மைதிலி...அழாமைகதை'

'அண்ணை...' விம்மல்தான்.

'என்னமைதிலி?ஏதேன்பிரச்சினையே?என்னண்டு சொல்லன் சாப்பாடு தாறாங்களில்லையோ?'

'சாப்பாடில்லாட்டியும் பரவாயில்லையண்ணை ஆனா இஞ்சை நிக்கிற பொடியள் சேட்டை விடுறாங்கள் அண்ணை.அரியண்டப்படுத்துறாங்கள் [illegible] வெளியிலை [illegible] போகது ....' மேலே தொடர முடியாமல் விம்மி வெடித்தாள் மைதிலி.

செல்வம் மீண்டும் ஆத்திரமானான்எளிய நாயள் பொம்பிளைச் சகோதரங்களோடை பிறக்காத நாயள் அவங்களை கண்டதுண்டமா....

போனில் காசு மட்டம் மிகமிக குறைந்திருந்தது.

'நான் சிலோனுக்குத் திரும்பிப் போறன். இந்த நரகத்துக்கை இருக்கேலாதண்ணை.' அழுதாள்.

' மைதிலி பயப்படாதே வாற வெள்ளி உன்னை அனுப்பிறதா ஏஜென்சிக்காரன் இப்ப தான் சொன்னவன்.பிறகு என்னோடு தான் இருக்கப் போறாய் என்ன.உங்கை வேறை பொம்பிளையள் இருக்கினம் தானே?'

'ஒரு அக்கா தான் நிக்கிறா. அவவையும் நாளைக்கிரவு அனுப்பிப் போடுவாங்கள். பிறகு நான் தனியத் தான் எனக்குப் பயமாயிருக்கண்ணை' அழுதாள்.

'ஒண்டுக்கும் யோசியாதை. நல்லவங்களும் இல்லாமலே போகப் போறாங்கள்.ஏதேன் நடந்தா நான் செத்.....' டெலிபோன் கூவி தொடர்பு அறுந்துவிட்டது. காலியானபோன டெலிகாட் வெளியே விழுந்தது. செல்வத்திடம் வேறகாட்டோ சில்லறையோ இல்லை. கண்ணில் படிந்த ஈரத்தைத் துடைத்துக் கொண்டு பூத்கதவைதிறந்து வெளியேவந்தான்.இதமான ஈரக்காற்று உடல் சூட்டுடன் மோதியது . கிளிசலான கறுப்புத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துவாரங்களிலிருந்து வெளிச்சம் பாய்வது போல நட்சத்திரங்கள் மிக மிக நீண்ட இடைவெளி விட்டு மின்னின. கீழே தெருவிளக்குகள் மஞ்சள் பூசின. வேகமாய் பாய்ந்து வந்த கார்கள் சிவப்புக் காட்டி மறைந்தன. மற்றப்படி சுத்தமாய் இருள்.

றெஸ்ரோறண்ட் பின் கதவைத் திறந்து கொண்டு செல்வம் உள்ளே நுழைகையில் இவனையே எதிர்பார்த்த செவ்.... 'வெளியிலே நல்ல காலநிலையோ..?

அவசரமாக மொஸ்க்கோவுத் தொலை பேசியில் தொடர்பு கொள்ள வேண்டியிருந் ததால்....'

'நான் உனக்குச் சம்பளம் தருவது பிர்ஸா போடுவதற்கு'

'என்னுடைய தங்கை மொஸ்க்கோ வில் நிற்கிறாள் அவளுடன்....'

'வாயை மூடு. நாளை உன் தம்பி வந்து பாக்கிஸ்தானில் நிற்பான் அவர்களுடன் கதைப்பது முக்கியம் என்றால் செய்தவேலைக்கு சம்பளம் வாங்கிக் கொண்டுபோ. இப்போது கூப்பிட்டாலும் இங்கு வந்து வேலை செய்ய நூறுதமிழர்கள் காத்திருக்கின்றார்கள்.'

செல்வம் மறுபடி ஆத்திரமானான் ஏஜென்சிக்காரன் காசைத்தின்னுறான் இவன் ஆளைத்தின்னுறான். இந்நாடு நீயும் உன்ரை வேலையும். இத்தனை வருசம் இதுக்கேயே கிடந்து அவிழ்றதைக் கொஞ்சம் கூட யோசிச்சுப் பாக்காம நாய் மாதிரிக் குலைக்கிற உன்னட்டை ஒரு மனுசன் வேலை செய்வானோ. பேசாம றோட்டிலேயிருந்து பிச்சை எடுக்கலாம். நீயும் உன்ரை வேலையும். இத்தனையும் வந்து தொண்டையுடன் நின்று விட்டன. இவனோடை கோழி வேலையை விட்டால் பதினையாயிரம் கடனை எப்படி அடைக்கிறது? வெளியேறினால் பின் என்னெண்டு கட்டிறது? வீட்டு வாடகை..?கரண்ட்...?

'மன்னித்துக்கொள்ளுங்கள் இனிமேல் வேலைநேரத்தில் இப்படி வெளியே போக மாட்டேன். இது தான் கடைசித்தடவை'

கெஞ்சும் குரலில் சொல்லி விட்டு திடீர் வேகமெடுத்து மாவை உருட்டி தட்டையாக்கி தட்டில் போட்டு ரொமாற்றன் சோஸ் ஊற்றி சேஸ் தூவி....

செவ் அவ்வளவு கெதியில் விடுவதாயில்லை. இத்தாலியிலும் டொச்சிலும் மூடிந்தளவு கோபமாய்த்திட்டித்தான் செவ் என்டதை இன்னொரு முறை நிரூபித்து விட்டுத்தான் போனான். செல்வத்துக்கு கண்களில் நீர் முட்டியது.

நான் அப்பவும் சொன்னனான் செவ் வன் வந்தா கத்துவானெண்டு. நீயும் நல்ல நேரம் பார்த்துத் தான் போனடிக்கப் போயிருக்கின்றாய்' என்று இப்போது தான் வாயைத் திறந்தான் அடுத்த மூலையில் நூடில்ஸ் தயாரித்துக்கொண்டிருந்த மணி.

'நானென்ன செய்ய தங்கைச்சியோடை கதைக்க ஏஜென்சிக்காரன் இப்பதான் நேரம் தந்தவன். அவள் அங்க பயந்து கொண்டிருக்கிறாள். நான் போனும் பண்ணாட்டி ....'

'டேய் இப்பேன்ராப்பா அழுராய் செவ்வன் வந்தா திருப்பிக் குலைக்கப் போறான். வேலையைக் கவனி'.

செல்வம் எல்லாத்துக்குமாய் சத்தமில்லாமல் அழுதான். பிர்ஸாவுக்கு உப்பு கண்டபடி கூடியது.

'எப்பவாம் தங்கைச்சியை அனுப்பிறது.?' கேட்டபடி மணி செய்த நூடில்ஸ்சைச் சோடித்து முன்னுக்கு அனுப்பினான். வாற வெள்ளியாம்.

'சரி கண்ணைத்துடை'

இருவரும் வேலையில் ஒன்றித்தார்கள். அடுத்த நாள் விடுமுறையாததால் நிறைய டொச்சுக்காரர் சாப்பிட வந்து கொண்டேயிருந்தார்கள். நூடில்ஸ்களும் இடைவெளியில்லாமல் பறந்து கொண்டிருந்தன. ஸ்பிரி, சிக்கின் ஆட்டி சொக்கன் பப்பிறிக்கா — பிறோட்டா....என்று பிர்ஸாவுக்கும் பேர்கள் மாற செல்வம் சூசினியில் ஒரே மாவைத்தான் உருட்டி தட்டையாக்கி...

ஒரு மணியளவில்த் தான் வேலை முடிந்தது. செல்வமும் உடுப்பு மாற்றி வெளி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யில் வந்த போது ஆரவாரம் கொஞ்சமாக அடங்கியிருந்தது.இளசுகள் பால் மாறிக் கட்டியணைதுக் கொண்டு டிஸ்க்கோவுக்கு போக புகையடித்து மிதந்த படி சிலதுகள் திரும்பிக் கொண்டிருந்தன.அரசாங்கத்துக்கு பிரச்சினை குடுக் காத இளம்சமுதாயம்.

'என்னடாப்பா கடுமையா யோசிக்க றாய்?' கேட்டபடி மணி ஒரு சிகரட்டை பற்ற வைத்தான்.

'இல்லையடாப்பா....உவ்வளவு தொகையா காசு மாறியாச்சு எப்படி திருப்பியடைக்கப் போறேனோ?'

'உனக்கென்னடாப்பா தங்கச்சி வா றதுக்கு முந்தியே சண்ணுக்குப் பேசி முடிச்சி ட்டாய். உன்ரை சினேகிதன் உன்னட்ட சீத னமே கேட்கப்போறான். பக்றியிலை வேலை செயிற இமிக்கிரேசன் மாப்பிள்ளை கலியாண வீட்டையும் தன்ரை செலவிலை தான் எப்படி யும் நடத்துவான். பிறகென்ன.?' புகை வளை யங்களாகி மேலேறி மறைந்தது .

'எல்லாம் சரியடாப்பா மாறின காசை நான் தான் கட்டியாக வேணும்.ஏஜென்சிக்கா ரன் இன்னும் என்னை விடுறமாதிரித் தெரியே ல்லை...ம்...'

வீடு சேர்ந்ததும் முதல் நாளையான் சோ றையும் கறியையும் ஆளாளுக்குப் பிரட்டி அடி த்து விட்டு படுக்கைக்குப் போகையில் விடியத் தொடங்கி விட்டது. இரண்டு நாள் கழித்து செல்வத்துக்கு போன் வந்தது.

'உம்மிட தங்கச்சிதான மொஸ்க்கோ விலே நிண்டவ?'

'ஓமண்ணை'

'ஆளை யூகோவுக்கு கொண்டந்திட் டம். நாளைக்கிரவு எப்படியும் ஆளை ஜேர்மனி க்குள்ளை கொண்டந்திடுவர். அதுக்கிடையில் நீர் நான் தார அட்ரசுக்கு போய் ஐந்நூறு டொலர் குடுத்து விடும்.

'அண்ணை நான் எல்லாக் காசும் கட்டியிட்டன். ரண்டு நாள் முந்திக் கூடி ரண் டாயிரம் மார்க் ஃபக்ஸில மொஸ்க்கோவுக்கு அனுப்பினனான்.'

'அது மார்க்கண்டுவுக்கு. யூகோவுக்கு கொண்டு வந்தது மட்டும் தான் அவர். இஞ்சையிருந்து ஜேர்மனிக்கு நான் தான் ஆக்களை அனுப்புறனான்'.

'அண்ணை எல்லாத்துக்கும் சேர்த்துத்தானே மொத்தமாக் கட்டினது இப்ப ஒவ்வொரு நாட்டிலையும் வந்து நிண்டு கொண்டு

'எனக்கும் உம்மோடை கதைச்சுக் கொண்டு நேரமில்லை. கன இடங்களுக்குப் போன் அடிக்க வேணும் என்ன மாதிரி..? காசு கொண்டு போய் குடுக்கிறீரோ அல்லாட்டி.....,?

'கொண்டேக் குடுக்கிறேன்'

'நான் ஒருக்கா தங்கைச்சியோடை கதைக்கேலாதோ..?

இப்ப கதைக்கேலாது. ஆள் வேலையாலயிலே நிக்குது. நீர் வேணுமெண்டா ஒரு பதினொரு மணியோல நான் தார நம்பருக்கு அடியும்'.

'செல்வம் நம்பரைக் குறித்துக் கொண் டான்.தலை வெடித்தது . ஏஜென்சிக் காரங்கள் எல்லாரையும் நிக்க வைத்துச் சுட வேணும். எளிய ராஸ்கல்கள். ரத்தம் வாற மாதிரி காசு கறக்கிறாங்கள். இப்ப உடன் காசுக்கெங்கை போறது ? போனில் கை வைத்தான்.

'அண்ணை நான் செல்வம் கதைக் கிறன். அவசரமாய் கொஞ்சக் காசு மாறலா மோ?'

'அட சை.. ஒரு அஞ்சு நிமிஷம் முந்தி அடிக்காதையேன். இப்பதான் சிவநாத் வந்து இருந்ததை வேண்டிக்கொண்டு போறான்.

அடுத்த முயற்சி.

'நான் செல்வம் கதைக்கிறன்'

'என்ன விஷயம்?'

'கொஞ்சக் காசு அவசரமாய் தேவைப்படுது அதுதான்...'

'அவர் தான் வரவேணும்'

தன் முயற்சியில் சற்றும் மனம் தள ராத செல்வம் மீண்டும்...

'செல்வம் கதைக்கிறன்'

'எப்படியடாப்பா சொல்லு . என்ன ஆளையே இஞ்சாலைப் பக்கம் காணேலை. இண்டைக்கு வாவன்.'

'தங்கச்சியின்ரை அலுவலாய் ஓடி த்திரியிறன். ஒரு அவசர உதவியடாப்பா. காசு கொஞ்சம் அவசரமாய் தேவை.'

'உந்தப் பகிடி தான் வேண்டாமெ ங்கிறது. வேண்டின காசைத் திருப்பித் தார தெரியேலை. அதுக்கிடையிலை...'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'என்னடாப்பா நான் எங்கையேன் ஓடப்போறேனே..? எல்லாத்தையும் சேர்த்து ஒண்டாய்த்தாறன். இப்ப ஒரு அவசர தேவை...?

'என்னட்டை ஒரு பெனிக்குமில்லை. காறொண்டு எடுத்ததிலை காசு எக்கச்சக்க !ரொய் முடிஞ்சு போச்சு'

முயற்சி திருவினையாக்கவில்லை. எல்லாருமே கையை விரிச்சாச்சு.எல்லாரிட்டையும் ஏற்கனவே மாறியாச்சு.இனி யாரிட்டை கையேந்தலாம்...?'

இரந்துண்டு வாழ்வாரே வாழ்வார்.

பதினொரு மணி வந்தது .மைதிலி யூகோசெலவியா. போன். றிங்

'ஹலோ'

'நான் ஜேர்மனியிலிருந்து செல்வம் கதைக்கின்றேன்.மைதிலியோடை கதைக்கலாமே....?

தடபுடல் சத்தங்கள்

'மைதிலி'

'அண்ணை.....' சொல்லி வைத்தாற் போல் அழத்தொடங்கினாள்' '

'என்ன நீளப்ப பார்த்தாலும் அழுது கொண்டு.இஞ்சை ரெலிபோன் பில் ஏறுது. ஏசுவதாக நினைத்துக் கொண்டாலும் செல்வத்தின் தொனி அப்படியாயில்லை.

'அண்ணை, என்னைக் கெதியாக் கூட்டிக்கொண்டு போ'

யூகோசெலவியா எங்க. ஜேமனி எங்க.

'மைதிலி...இன்...ரெலிபோன் கட். தொடர்ந்து முயற்சித்தான் . இரைச்சல்தான் வந்தது . சண்டை நடக்கும் நாடு . அரைமணித்தியாலமாவது லைன் கிடைக்கப் போராடியாக வேணும். நேரமில்லை.வேலைக்குப் போக வேணும்.பிந்தினால் செல்வன் கத்துவான்.

மைதிலியை எந்தப் பிரதேசத்தில் வைத்திருக்கின்றார்கள்?சேர்பியா?பொஸ்னியா? குரோசியா? எங்கை குண்டு வெடிக்குமோ? சீ..... அழிலவ யோசிக்கக் கூடாது, நல்லதே நடக்கும்.

'வேலைக்குப் போய் மனக் குழைந்து, உடுப்பு பிரட்டி வீட்டுக்கு வந்த போதும் யோசனைகள் கரைக்கெங்க போறது? என்னர்ரை காலையும் பிடிச்சாச்சு கடைசியாயுள்ள வழி செல்வனிடம் சம்பளத்தை அட்வான்ஸாய் கேட்பது. அவன் எமகாதகன். அஞ்சு பெனிக்குக் காண்டி அஞ்சு நிமிசமாவது ஏசுவான்.எல்லாத்தையும் பொறுத்துக் கொள்த்



தான் வேணும். பொறுத்தார் பொறுக்குவார்.'

'படுக்கும் போது விடிந்து விட்டது .'

இரண்டாம் பாகம்

'பனஸொனிக்கில் குளிச்சால் குத்தாலம், கும்பிட்டால் பரமசிவம் வந்து கொண்டிருந்தது. மேசையில் மரியக்கோன்,கோலா,ஆஷ்'ரே,கிளாசுகள்,சிப்ஸ் மேசையெங்கும் சிந்தியிருந்தது.போதாததுக்கு சிகரட் புகை,ஆளாளுக்கு எல்லா இடத்திலும் இருந்தார்கள்'.

'வெளியே கோடை கால வெயில்,விற்றமின் டி படுகின்ற பெண்களின் இடங்களை சன் ஜன்னலிலிருந்து கண்காணித்துக் கொண்டிருந்தான். கையில் சுத்த சைவமாய் கோலா.

'நான் கட்டன்றைற்றா சொல்லிப் போட்டன்.ஸமர் முடியட்டும் கஸவில நிக்கமாட்டணெண்டு' என்றான் ராஜேந்தர்.

www.tamilarangam.net

'ஏன்ராப்பா வேலை கூடவே? '

'வேலை என்னத்தை.அப்படி இப்படி உடுப்புகளோடை பெட்டையள் முகத்துக்குக் கிட்ட வந்து நிண்டா பில் எங்கை அடிக்கிறது. சாப்பாட்டையும் குடுத்து , காசையும் குடுத்து விட்டா கடைசியா கையால தான் போட்டுக் கட்ட வேணும்.'

'இந்த இடத்தில நாங்கள் ஆண்டவனுக்கு நன்றி சொல்ல வேணும்.'

'இப்படி உடுப்புகளைப் போடுற அறிவைத் தந்ததுக்கோ?'

' அஞ்சாறு மாதத்துக்கு மட்டும் சமரைத் தந்ததுக்கு. உனக்குச் சொன்னா என்ன மச்சான். வெளியில் போனா கற்போடை திரும்பி வருவேனோ எண்டு ஜமிச்சமாய்க் கிடக்கு'

'இஞ்சையென்ன பெரிய ஸமர். மொஸ்கோவிலை நிக்க வேணும்' என்ற படி ராஜேந்தர், ஞானசிவத்தின் சம்பாஷனையில் குறுக்கிட்டான் கண்ணன்.

'சரி தொடங்கியிட்டான் மொஸ்கோப் புராணம் பாட' என்றான் ராஜேந்திரன்.

'ஆளை விடு, நாலு விசயத்தைக் கேப்பம். பொதறிவு வளரும்'
கண்ணன் ஒரு மிடர் விட்டு, எரிவைச் சகித்துக் கொண்டு தொடங்கினான். மொஸ்கோவில் ஏஜென்சி கிருபையால் ஒன்றரை வருடங்கள் தங்கி, ஜேமனி வந்து இரண்டு கிழமைக்கு மேலாகிறது .'

'அதை எப்படிச் சொல்லுறது . ஒரு சிகரெட் பெட்டியைக் காட்டியே ஒரு மொஸ்கோப் பெட்டையைக் கொண்டு போகலாம். அங்க அதுகள் காசுக்கும், சாப்பாட்டுக்கும் சரியாக் கஷ்ரப்படுதுகள். அதைச் சரியாப் பாவிக்கிறது எங்கடை சிறீலங்கன் தான். எங்கடை சிலோன் ரூபாவை விட அவங்கட றூபிள் பெறுமதி குறைவு தெரியுமே. நாங்கள் ஐஸ்கிறீம் வேண்டிக் குடிச்சாலே அதுகள் ஆவெண்டு பார்த்துக் கொண்டு நிக்குங்கள். எல்லாம் கொப்பச் செவ், ஜெல்சின்ரை புண்ணியம்.'

'பொறு , பொறு, சிகரெட் பெட்டியோட பெட்டை பிடிக்கலாமெண்டுறியோ.....?'

'என்ரை விசாவுக்கு மொஸ்கோ போகலாமோ?' விசாரித்தான் ஞானசிவம்.

'சகலத்தையும் அனுபவிச்சுப் போட்டுத் தான் வந்திருக்கிறன். மொஸ்கோ பெட்டையளை விடுங்கோடாப்பா. இஞ்சால வாறதுக் கெண்டு வந்து எங்கடை பெட்டையள........ சாச்சா......'

'டேய்.... நிப்பாட்டாமச் சொல்லு' எல்லோரும் ஆர்வமாயிருந்தார்கள்.

'கலியாணம் பேசி வந்த கன பெட்டையள் அங்கேயே பெடியளைப் பிடிச்சு செற்றிலாயிட்டுதுகள். சிலதுகள் வடிவாய் என்ஜோய் பண்ணிப் போட்டு இஞ்சை வந்து வேறையாளைக் கலியாணம் கட்டியும் இருக்குதுகள்' சன் சட்டென்று திரும்பினான்.மூளையில் ஏதோ வெட்டியது . 'எல்லாப் பெட்டையளும் அப்படியில்லை ' என்றான்.

'ஆ.... சும்மா போடா, நான் எத்தனை பேரோட...... ' கண்ணன் தொடர்ந்து சுவாரசியமாக விவரிக்க, மற்றவர்கள் ஏக்கமாய் கேட்டுக் கொண்டிருக்க, சண் தனக்குள் சில கணக்குகள் போட்டுப் பார்த்துத் தீர்மானித்துக் கொண்டான். தொடர்ந்து மூன்று நாட்கள் அதையே யோசித்து, உறுதி செய்து கொண்டு, செல்வத்துக்கு போன் பண்ணினான்.

'என்னடாப்பா நான்கு நாளு உன்னைப் போனிலையே பிடிக்க ஏலாமல் போய்ச்சு. எங்கே போய்த் தொலைஞ்சனீ. மைதிலியை நேற்றுப் போய்க் கூட்டியந்திட்டன். வாவன் வீட்டை.'

'பிறகு ஆறுதலாய் வாறன். இன்னொரு முக்கியமான விசயம் உன்னோடை கதைக்க வேணும்.'

'வீட்டை வந்து கதையேன்ராப்பா.'

'இல்லை போனிலேயே கதைக்கிறது தான் ஈஸி.'

'மாப்பிள்ளைக்கு வெட்கம் வந்திட்டது போலை'

'எனக்கு இப்ப கலியாணம் செய்யிற பிளான் இல்லை'

'என்ன இருந்தாப் போல . சரி பிரச்சனையில்லை. அதுவரைக்கும் மைதிலி பாஷை படிக்கட்டும்.'

'நான் மைதிலியைக் கலியாணம் செய்யிறதாய் இல்லை'

'டேய் பகிடி விடாதை'

'சீரியசாத்தான் சொல்லுறன்'

'ஏனென்று சொல்லன்'

'இங்க சனம் முழுக்கத் தெரியும், உனக்கு மைதிலியைப் பேசியாச்சு என்று. இப்ப போய்......'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'விளக்கமாய் கதைக்கேலாது'

'சிலோனில இருந்து டிரக்ராய் வாற பிள்ளையைத் தான் நான் கலியாணம் செய்வன். மற்றது நீயும் நானும் எப்பவும் பிரன்ஸ் தான்.' செல்வம் போனை வைத்து விட்டான். அதிர்ச்சி, ஆத்திரம், கோப வெப்பம் உடலில் பரவியது .

'பன்னாடைப் பரதேசி'

'என்னண்ணை ஏதேன் பிரச்சினையே?' மைதிலி அண்ணனை நெருங்கி வந்தாள்.

எப்படி அவளுக்குச் சொல்லுவது . ஒரு அண்ணை தங்கச்சியிட்டை.....

'என்னெண்டு சொல்லண்ணா'

'எப்படியோ எப்பவோ சொல்லியேயாக வேண்டும். அதை இப்பவே சொல்லிப் போடலாம். அவள் கனவு காணக்கூடாது. இப்பவே.....சொன்னான்.

'ஆனால் அவன் எதிர்பார்த்த படி நடக்கவில்லை.

'இதுக்கேன் யோசிக்கிறாய் அண்ணை. அந்தாள் இல்லையெண்டாப் போல எனக்கு கலியாணமே இல்லையோ? உன்ரை சினேகிதன் தன்ரை முடிவை இப்பவே சொன்னது நல்லதாய்ப் போச்சு. இப்படியெல்லாம் ஏமிச் சப்படுகிறவன் நாளைக்கு கலியாணம் கட்டின பிறகு. நான் தற்செயலாய் வெளியிலே போய் பஸ் இல்லாமல் பிந்தி வந்தாலும் ஆரோடையான் படுத்திட்டு வாறன் என்று தான் நினைப்பான். உங்களைப் போல ஆம்பிளைகள்.....தூ...'

'மைதிலி துப்பியது சமூகத்தின் மேல் விழுந்தது '

மூன்றாம் பாகம்.

.....என்று கதையை முடித்தேன். திருப்தியாய் இருந்தது . கனகாலத்திற்கு பிறகு எழுதிய கதை இது . புலம்பெயர் இலக்கியத்தில் சேர்ப்பார்களா?

மைதிலி துப்பியது சமூகத்தின் மேல்விழுந்தது என்ற வரியின் மூலம் கதாசிரியர் சமூகத்தை நன்றாகச் சாடியுள்ளார் என்று எங்கோயாவது ஒரு மூலையிலிருந்து ஒரு வாசகர் அப்பாவித்தனமாகக் கடிதம் போடுவார். பிரச்சினைக்குத் தீர்வு சொல்லாமல் தப்புவன் எழுத்தாளனல்ல' என்று யாராவது முற்போக்குகள் கோபித்தால் வாசகர்களைச் சிந்திக்க வைக்கின்றேன் என்று வாசகர்கள் மேல் பாரத்தை இறக்கி விடலாம்.

என்ன தலைப்பு வைக்கலாம்? சிம்பிளாய் இருக்கக் கூடாது. கவர்ச்சியாயும் இருக்க வேண்டும்..... 'வந்தவள் வராமல் வந்தால் இதெப்படி தலைப்பு என்று யோசிக்கையில் போன் ஒலித்தது . 'கலோ நான் மணி கதைக்கிறன்'

'என்ன இந்த நேரம்?'

'உனக்கு விசயம் தெரியாதே?' செல்வத்தின் தங்கைச்சி மைதிலி நித்திரைக் குளிசை போட்டிட்டாள். ஆள் இப்ப ஆஸ்பத்திரியிலை. படு சீரியஸ். இப்போதைக்கு ஒன்றும் சொல்லேலாது என்று டாக்டர் சொல்லிப் போட்டார்.

'ஏன் என்ன நடந்தது .?'

'சண் அவளை முடிக்க மாட்டேன் என்று சொன்னது தெரியும் தானே. அதோடை மைதிலி சரியாக் கவலைப்பட்டுப் போனாள். பிறகு செல்வம் கன சம்பந்தங்கள் பேசினவன் ஆனா கடைசி நேரத்திலே அதுகள் சண் மாட்டேன் என்ற கதையைக் கேள்விப்பட்டு கிண்டிக்கிளறி அவனேன் மாட்டேன் என்றதையும் கண்டு பிடிச்சு.....பிறகென்ன எல்லாச் சம்பந்தங்களும் இடையிலை முறிந்து. கடைசியில இவ்வளவுக்கு ஒரு பகுதி வந்து மாட்டேன் என்று சொல்ல பொடிச்சி குளிசையை விழுங்கிப் போட்டுது.'

விசர் பொட்டை என்று சொல்லி விட்டு வேறு புதினங்களையும் அலசி விட்டு போனை வைத்தேன். மைதிலி குற்றுயிராய் படுத்திருக்கும் காட்சி ஒரு தரம் மின்னியது. சா... அதை அழித்து விட்டு கதைக்கு வந்தேன். கதையில் வாற பெயர்களை மாற்ற வேண்டும். மைதிலியை ஜானகியா....செல்வத்தை சந்திரனாய்.... மணியை.....

கதையை எங்கே அனுப்பலாம்? வீரகேசரிக்குத்தான் வாசகர்கள் கூட. ஆனால் சரிநிகருக்கு ஒரு கிரெடிட் இருக்கின்றது. என்ன புனை பெயரில் எழுதலாம். பீம்சிங்கிற்கு பாவன்னா வரிசைப் படங்கள் எல்லாம் வெற்றி.பாண்டியன் ? பாக்கியகியநாதன்? பார்த்திபன்???......

முற்றும்.

( நன்றி சரிநிகர்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கருக்கலைப்பு
# விபச்சாரம் பற்றி ஓர் நோக்கு.....

– அருண்.

இன்று பல பத்திரிகைகள், சஞ்சிகைகள் உட்பட மக்கள் மத்தியில் அதிகமாக விவாதிக்கப்பட்டு வரும்விடயங்கள் கருக்கலைப்பு விபச்சாரம் போன்றனவே.இது பற்றி அதிகமான தமிழ் சஞ்சிகைகளும் கருத்துக் கூறிய வண்ணம் உள்ளன. அனேகமானோரின் கருத்தானது இச்சம்பவங்களில் ஈடுபடுபவர்களின் நிலைமையும் உடைநிலைமையும் கருத்தில் கொள்ளாது இச்செயற்பாடுகள் இன்றைய தமிழ் சமூகத்தில் அசிங்கத்துக்குரியவை என்ற பார்வையும் சமூகத்தில் இருந்து இவர்களை ஒதுக்குவதும் இன்றைய சமூகப் பழக்கமாக இருந்து வருகின்றது.

கருக்கலைப்பு: இது தொடர்பாக இன்று பல விவாதங்களும் ஏன் பல கொலைகளும் நடந்தேறியுள்ளது. அண்மையில் அமெரிக்க கருக்கலைப்பு வைத்தியசாலைக்கு முன் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதை செய்தவர்கள் கருக்கலைப்பு எதிர்ப்பாளர்களே. இதைப்போன்ற பல நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. இச்செயற்பாடானது கருக்கலைப்பை தடுத்து நிறுத்த அதை செய்பவர்களையும் செய்ய துணைபோபவர்களையும் கொலை செய்வதன் மூலம் மக்களை விரட்டி தடுக்க முயல்கின்றனர். இது சரியான நடைமுறையா என்று ஒரு கணம் நோக்குவோம். இல்லவே இல்லை சரியானதா பிழையானதா என்ற பிரச்சனை பற்றி இங்கு நான் ஆராயவில்லை ஆனால் கருக்கலைப்பு ஏன் இச்சமூகத்தில் நடைபெறுகின்றது என்பது பற்றி பார்ப்போம்.

இதற்கு அடிப்படை காரணம் இன்றைய உலக வளர்ச்சியே. அதாவது இன்றைய உலகமானது வலியது வாழ்வதும் நலிந்தது அழிவதும் என்ற நிலையின் கீழே உள்ளது. இதன் அடிப்படையில் தான் மக்கள் மீது பலவிதமான ஒடுக்கு முறைகள் கட்டவிழ்த்து விடப்படுகிறது. இதனை எதிர்த்து போராடுவது மக்களின் தவிர்க்க இயலாத ஒன்று. அப்படி எதிர்க்காவிடின் அவர்கள் அழிக்கப்படுவது நிச்சயம் என்பது உணர்ந்தவையாமேயே இந்நிலையில் இரண்டாம் பிரஜையாக வசித்து வரும் பெண்கள் மீது அநேக ஒடுக்கு முறைகள். தம்மை சுற்றியுள்ள ஒடுக்குமுறைகள் உடைத்தெறியவேண்டின் தம்மீது சுமத்தப்படும் சுமைகளும் இறக்கப்படுவதும் அவசியமாகின்றது. தம்மை தாமே சுமக்கமுடியாத இச்சமூகத்தில் எப்படி குழந்தையுடன் சுமப்பது என்ற கேள்வி இவர்கள் மீது எழுவதன் வெளிப்பாடே கருக்கலைப்பு இவற்றுக்கெல்லாம் அடிப்படை காரணம் இச்சமூகமே தவிர கருக்கலைப்பவர்கள் அல்ல. இங்கு எதிர்க்கப்படவேண்டியது இச்சமூகத்தின் விதிமுறைகளையே ஒழிய தனிமையில் கருக்கலைப்பவர்களை அல்ல இச்சமூகமானது மாறாத வரைக்கும் சுமத்தப்படும் சுமைகள் இல்லாதொளியும் மட்டும் கருக்கலைப்பு ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

விபச்சாரம்: இன்று இதை செய்பவர்கள் காறி உமிழும் நிலையும் தீண்டத்தகாதவர்கள் என்ற பார்வையும் உள்ளது .இது சரியானதா? இச்செயற்பாடானது இன்றோ நேற்றோ ஆரம்பமானதல்ல மாறாக அரசகாலத்திலிருந்து முன்பிருந்தே காணப்பட்டு வரும் ஓர் விடயம். சமூக மாற்றங்கள் ஏற்படும் போது ஒவ்வொரு நிலையும் மாறி வருகின்றது. அதேபோல் விபச்சாரமும் அரசகாலத்தில் இரகசியமாக இருந்த ஓர் விடயம் இன்று முதலாளித்துவ வளர்ச்சியினுடாக இது தொழில் என்ற அந்தஸ்தை எட்டியுள்ளது. மேலும் இச் செயற்பாட்டை செய்பவர்களின் நிலையை கவனத்தில் கொள்வோமானால் இத் தொழிலை ஆரம்பிப்பதற்கு முன்பு அவரோ அவரது குடும்பமோ பசி பட்டினி போன்ற தொல்லையாலும் வேறு ஒடுக்கப்பட்ட செயற்பாடுமே இதை செய்யத் தூண்டியதன்காரணம். அதன் பின் சமுகத்தின் தூண்டிதலின் ஊடாக தொடர்ந்தும் இத் தொழிலை செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது.

இன்றைய சமூக அமைப்பில் விபச்சாரம் செய்பவர்கள் குற்றவாளிகளா அல்லது இச்சமூகம் குற்றவாளிகளா என்ற கேள்விக்கு , இச்சமூகமே குற்றவாளி என்பதே உண்மையாகும்.

இப்படியான கருக்கலைப்பு, விபச்சாரம் போன்ற செயல்முறைகள் பற்றி சில குறிப்புகள் மேலே கூறி உள்ளென என்னைப் பொறுத்தவரையில் இரு விடயமும் சமூகத்தில் தவறான பார்வையில் பார்க்கப்படுவதுடன் இதனை செய்பவர்கள் மீது பழியும் போய் சேர்ந்து விடுகின்றது. எய்தவன் இருக்க அம்பை நோவது போன்று இச்சமூகத்தில் பிழை இருக்க இச் சமூகத்தால் இயக்கப்படும் பொம்மைகளான மக்களை குற்றம் கூறுவது அர்த்தமில்லாத ஒன்றாகும்.

இந்நாற்றமெடுத்த இச்சமூகம் மாற்றபடவேண்டும். இச்சமூகம் மாற்றபட்டு பாட்டாளி வர்க்க நலனின் அடிப்படையாக கொண்ட சமூகம் உருவாகும் போது மட்டுமே மனிதன் மனிதனாக வாழ முடியும்...

– முற்றும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மத்தியான மழை

முல்லையூரான்

தீ தின்று பொழியும் மதியமழை
நாளொன்றில்
பங்குனி வெயிலின் எரிவுகளுக்கிடையே
உச்சி கறுத்து மேலே விரட்டிநிற்கும்
வானசுரன்
மின்னல் எறிந்து மேலே முழங்குவான்.
தலையணையில் தலைசரித்த காற்றிற்கு
இப்புழுக்கத்துள்ளும் தூக்கமுடியாத
ஒரு தூக்கம்.
மழைத்துமிக்கஞ்சி புகலிடம் தேடும்
அச்சிறுகுருவி
சிறகு சறுக்கிப் பின்பெழுந்தோடவும்,
முற்றத்து சிறுமணலில் கல்லென்ன
கனதுமிகள்
கீழ்விழுந்து மண்வாசமெந்தன்
நாசிலேறவும்,
காய்ந்த நெல்லள்ளிக் கடகத்தோடு
மாலுக்குள் ஓடும் என் தாயை
முற்றத்து நடுத்தென்னை
அணிலொன்று
தெறித்துக்கத்தி அவளை
அவசரப்படுத்தவும்,
அந்த மத்தியான மழை இன்னமும்
சரியாய் இறங்காதிருக்கும்.
வீணாகி
முற்றத்துமுல்லைக்கொடியின்வேரவிக்கும்
கோடைமழைகண்டு
முள்முளைத்த கண்ணினனாய்
நம்முழவன் நகைப்பான்.

பத்துக்குஞ்சோடு தாய்க்கோழி
எச்சரித்துக்கத்திக்குளறி
மாவடியில் பருந்தோடு
சண்டையிடவும்,
பஞ்சென்ன
அப்பத்துக்குஞ்சுகளும்
திசைக்கொன்றாய்
தப்பித்தொழித்தோடி.. புல்லிலும்,
பொந்திலும், குப்புறக்கிடக்கும்
சிரட்டைக்கருகிலும்
பயவிழிக்குள் பாயும்
வேல்சொருகி ஒழித்திடவும்
அந்த முற்றத்து நடுத்தென்னை
அணில் – இப்போதும்
எச்சரித்து எச்சரித்து
வாலடித்துக் கத்தவும்,


எடுத்ததோர் போர்முடித்த
தாய்க்கோழி இறகுள்
பஞ்சென்ன
அப்பத்துக்குஞ்சுகளில்
ஒன்பதுமட்டும்
ஓடிவந்தொழியவும்
இப்போது அம் மத்தியானச்
சுடுமழை
பெய்யத்தொடங்கும்.

எனக்குத்தெரிந்த அவளும்
அவனும்
பக்கத்துவீட்டுத்
தாவாரமொன்றில்
எஞ்சிய கண்களோடு
இம்மதிய மழைக்கஞ்சி
சேர்ந்திருப்பார்:

வீடு திரும்ப

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப்போட்டி




இலக்கம் : 27

**உங்கள் பாவனைக்கு:-**

**அலுவலகப்பாவனைக்கு:-**

www.tamilarangam.net

CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro
Danmark.

c:30 No: 26

Afs.

www.tamilarangam.net

# சஞ்சவி

## ஆறு மலர்களுக்கான சந்தா

| | |
|---|---|
| Switzerland<br>France<br>Italy<br>London<br>Germany | 25 U$ |
| Canada<br>Australia | 25 U$ |
| Swedan<br>Norway<br>Denmark | 125kr. |

**காசோலை எடுக்கவேண்டிய கணக்கிலக்கமும், முகவரியும்:**

A/C.NO.7601-408876-9
CHANCHIVE
Vestjysk Bank
7500 Holstebro,
Denmark.

**காசோலை அனுப்பவேண்டிய முகவரி:**

CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro,
Denmark.

> "மறுக்கப்பட்டு, பழக்கமற்றுப்போனதொரு சுதந்திரமான
> கருத்துப்பரிமாற்றலை உருவாக்குவதற்கு
> எல்லோரது கருத்துக்களும்,
> விமர்சனங்களுமே
> வழிவகுக்கும்."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்